பக்கங்கள் : பத்து

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 20 செவ்வாய்க்கிழமை (06.11.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 340

# ‘கிபிர்’ அச்சுறுத்தல் மத்தியிலும்

# தமிழ்ச்செல்வனின் இறுதி நிகழ்வு

## மக்கள் பல்லாயிரக் கணக்கில் திரண்டு பிரியாவிடை

கிளிநொச்சி, நவம்பர் 6



**இலங்கை விமானப் படையின் வான் தாக்குதலில் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் இறுதிக் கிரியைகள் நேற்றுப்பிற்பகல் கிளிநொச்சியில் கிபிர் மற்றும் உளவு விமானங்கள் வானில் பறந்து அச்சமூட்ட அதற்கு மத்தியிலும், பல்லாயிரக் கணக்கானோர் கூடி நின்று கண்ணீர் மல்க சோகத்துடன் நடந்தேறின.**

கிளிநொச்சி நகரின் மத்தியில் இதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் இறுதி வணக்க நிகழ்வு இடம்பெற்றது. நேற்று முற்பகல் 11 மணியளவில் தமிழ்ச்செல்வனின் வித்துடல் எடுத்து வரப்பட்டு அங்கு வைக்கப்பட்டது. புலிகளின் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் முதலில் பொதுச்சுடரை ஏற்றினார். அடுத்து தமிழ்ச்செல்வனின் துணைவியார் இசைச்செல்வி ஈகச்சுடரேற்றி, கணவரின் பூதவுடலுக்கு மலர்மாலை சூட்டினார்.

தொடர்ந்து தளபதி கேணல் பால்ராஜ், அரசியல் பொறுப்பாளரின் பூதவுடலுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். அதையடுத்து தமிழ்ச்செல்வனுடன் மரணித்த ஏனைய ஐவரின் உருவப் படங்களுக்கும் அங்கு புலிகளின் பிரமுகர்கள் மலர்மாலை அணிவித்தனர். நேற்றுப்பகல் இறுதி நிகழ்வு நடந்த சமயம் கிளிநொச்சி வான் பரப்பில் அச்சமூட்டும் வகையில் கிபிர் விமானங்கள் அவ்வப்போது பறந்து திரிந்தன. ஆளில்லா உளவு விமானங்களும் தாராளமாக அப்பகுதிமீது வட்டமிட்டன.

எனினும் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் கூடி நின்று, கண்ணீர்மல்க அஞ்சலி செலுத்தி, தமிழ்ச்செல்வனுக்கு இறுதிப் பிரியாவிடை அளித்தனர்.

கிளிநொச்சி நகரில் ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் இறுதி வீரவணக்க நிகழ்வு நடைபெற்றது. கிளிநொச்சியில் முற்பகல் 11 மணிக்கு பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வனின் வித்துடல் வைக்கப்பட்டது. அங்கு பொதுச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஏற்றினார்.

வித்துடலுக்கு பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வனின் துணைவியார் இசைச்செல்வி ஈகச்சுடரேற்றி மாலை சூட்டினார்.

தொடர்ந்து தளபதி கேணல் பால்ராஜ்

(10ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தில் தமிழ்ச்செல்வன் இருந்தார் என்பது படையினருக்கு தெரியாதாம்!

### இராணுவப் பேச்சாளர் கூறுகின்றார்



கொழும்பு, நவ. 6

விமானத் தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தில் தமிழ்ச்செல்வன் இருந்தார் என்பதோ, அதில் அவர் இறந்தார் என்பதோ அச்சமயம் படைத் தரப்புக்குத் தெரிந்திருக்கவில்லை.

- இப்படிக் கூறியிருக்கிறார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார.

நேற்று பாதுகாப்பு அமைச்சின் ஊடக மத்திய நிலையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“எமது வான் தாக்குதல்கள் சரியான - துல்லியமான - புலனாய்வுத் துப்புகள், தகவல்களின் அடிப்படையிலேயே நடத்தப்

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலம்பெயர் நாடுகளிலும் நேற்று வீரவணக்கக் கூட்டங்கள்

கிளிநொச்சி .நவ.6

பிரிக்கேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு தாயகத்தில் வீர வணக்கக் கூட்டம் நடைபெற்ற அதே நேரத்தில் புலம்பெயர் தமிழர்கள் வாழும் அனைத்து நாடுகளிலும் சமநேரத்தில் வீரவணக்கக் கூட்டங்கள் நடைபெற்றன. தமிழகத்திலும் தலைநகர் சென்னையிலும் வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் வரலாறுகாணாத அளவுக்கு உணர்வெழுச்சியுடன் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு உலகத் தமிழினம் அணிதிரண்டு வீரவணக்கம் செலுத்தி பிரியாவிடை கொடுத்துள்ளது. (அ-1)

### வவுனியாவில் துக்கம் அனுஷ்டிப்பு

வவுனியா, நவ. 06

வான்குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் இறுதிநிகழ்வான நேற்று அரச கட்டுப்பாட்டில் உள்ள வவுனியா பிரதேசத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்கள், அரச நிறுவனங்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நிபந்தனையற்ற பேச்சுக்கு இணங்கும்வரை புலிகள் மீது முழு வீச்சில் தாக்குதல் தொடரும்!

### அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஆணித்தரம்



கொழும்பு, நவ. 6

நிபந்தனையற்ற பேச்சுக்குப் புலிகள் வரும்வரை அவர்களுக்கு எதிரான தாக்குதல்கள் முழு வீச்சுடன் தொடரும் என வழமைபோல் அறிவித்திருக்கின்றார் பாதுகாப்புத் தொடர்பான பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.

பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற மாநாட்டில் கலந்துகொண்டு தகவல் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

“சமாதானப் பேச்சுக்கான வாயில்கள் எப்போதும் திறந்தே உள்ளன என அடிக்கடி அறிவிக்கும் அரசு, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் விமானத்தாக்குதலை நடத்துவதன் அர்த்தம் என்ன? ” என மாநாட்டில் கலந்துகொண்ட வெளிநாட்டு ஊடகவியலாளர் ஒருவர் வினவியதற்கே மேற்கண்ட பதிலை அளித்தார் அமைச்சர் கெஹலிய.

பேச்சுகளில் கலந்துகொள்ள அரசு எப்பொழுதும் தயாராகவே உள்ளது. நிபந்தனையற்ற பேச்சுக்குப் புலிகள் வரவேண்டும். அதுவரை அவர்களுக்கு எதிரான தாக்குதல்கள் தொடரும். புலிகளைப் பேச்சு மேசைக்கு அழைக்கவே இந்தத் தாக்குதல்கள்” - என்று

(10ஆம் பக்கம் பார்க்க)

### முக்கியஸ்தர்களுக்குத் தடை

கொழும்பு, நவ. 6

பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் வீர வணக்க நிகழ்வில் கலந்துகொள்ளச் சென்ற அனைத்துலக ஊடகவியலாளர்கள் மற்றும் பிரமுகர்கள் படையினரால் வவுனியாவில் தடுக்கப்பட்டனர் என விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## விசேட அடையாள அட்டை பெறுவதற்கான படிவங்களை நாளைக்கு முன்னர் சமர்ப்பிக்கவும்

### படைத்தரப்பினர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 6

பாதுகாப்புப் படையினரால் வழங்கப்பட உள்ள விசேட அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய இறுதி நாள் நாளை ஏழாம் திகதியாகும்.

இதுவரை விண்ணப்பப்படிவங்களைகையளிக்கத் தவறியோர் அவற்றை 7ஆம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட நிலையங்களில் கையளிக்க வேண்டும்.

யாழ். நகர 512 ஆவது படைப்பிரிவு இது குறித்து நேற்று விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ வசிப்பவர்களுக்குப் பாதுகாப்புப் படையினரால் வழங்கப்படவுள்ள விசேட அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்களைக் கையளிக்க வேண்டிய இறுதித் திகதி இம்மாதம் 7ஆம் திகதி நாளையாகும். எதிர்காலத்தில் பொது மக்கள் மேற்

(10ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தஞ்சம் கோருகிறார் கருணா

லண்டன்.நவ.06

பிரிட்டனில் கைதுசெய்யப்பட்டுள்ள கருணா அரசியல் தஞ்சம் கோரியுள்ளார் என ‘ஹிந்துஸ்த்தான் ரைம்ஸ்’ பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் தனக்குப் பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்தே அரசியல் தஞ்சம் கோரியுள்ளார் என கொழும்பு அரச அதி

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தையில் மோதல் ஏ 9 பாதை மூடப்பட்டது

வவுனியா, நவ. 6

ஓமந்தைப் பகுதியில் நேற்றுப்பகல் கடும் மோதல் வெடித்ததை அடுத்து ஏ 9 கண்டி வீதி ஊடான போக்குவரத்துத் தடைப்பட்டது.

மோதல் இடம்பெறுவதை அடுத்து நேற்று நண்பகல் 12 மணியுடன் தங்களது கண்காணிப்பாளர்கள் அப்பகுதியில் பணியாற்றுவதிலிருந்து விலகிக்கொண்டனர் என செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அறிவித்தது.

அரசுப் படைகளும் புலிகளும் மாறி, மாறி கடும் பீரங்கி மற்றும் ஷெல் தாக்குதல்

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பிறந்த நாள் வாழ்த்து



தமயான் - மேரி நிக்கொலா
தம்பதியரின் சிரேஷ்ட புதல்வி தரண்யா
இன்று (06.11.2007) செவ்வாய்க்கிழமை
57, கண்ணாபுரம், நாவாந்துறையில் உள்ள
தனது இல்லத்தில் முதலாவது பிறந்தநாளை
வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.
இவரை அப்பா, அம்மா, அப்பப்பா,
அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார்,
பெரியப்பாமார், பெரியம்மாமார்,
சித்தப்பாமார், சித்திமார், மச்சாள்மார்,
மச்சான்மார், சகோதரர்கள் அனைவரும்
தரண்யா குட்டியை இயேசுவின் அன்பிலும்
பல்கலையும் பெற்று, பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.



தரண்யா
06.11.2007

57, கண்ணாபுரம்,
நாவாந்துறை. (67645)

தகவல்:
தந்தை.



# Students Visa Study in Cyprus

*(Cyprus member of Europion Union)*

*Available courses*
- Information Technology
- Engineering
- Business Studies
- Business Administration
- Law
- Hotel Mangement
- And many more

*100% VisaGuranteed*

*Qualification*
G.C.E (O/L) Or
G.C.E (A/L)
*Gurantteed*
Part time job & Accomadation
*No Need*
Bank Balance
Other Qualifications

மேலதிக தகவலுக்கு:

# Lucky International Education

*No: 01, Brown Road, Jaffna T.P.No: 222 6413*



# மாபெரும் மலிவு விற்பனை

வருட இறுதியை முன்னிட்டு சகல வகையான விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு சீருடைகள், பரிசுப் பொருள்கள் 5% தொடக்கம் 25% வரையிலான விசேட கழிவுடன் விற்பனை செய்யப்படுகின்றன.

**NEW POWER WORLD SPORTS CENTRE**

(சி-54268) திருநெல்வேலிச் சந்தி, யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி பூமணி தம்பையா



கோண்டாவில் மேற்கு, உப்புமடத்துப் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி பூமணி தம்பையா நேற்று (05.11.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா தம்பையா அவர்களின் அன்பு மனைவியும் விஜயரத்தினம் (N.A.B. பரிசோதகர், கொழும்பு), வசந்தாதேவி, ரஞ்சினிதேவி (கனடா), தயாரட்ணம் (புடைவை நெசவாளர் சங்கம், கோண்டாவில்), சியாமளாதேவி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் நந்தினி (ஆசிரியை), முருகதாஸ் (நில அளவை உதவியட்சகர் - திருகோணமலை), காலஞ்சென்ற பத்மநாதன் (கனடா), துஷ்யந்தன் (சுவிஸ்), சாந்தகுமாரி ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆதர்சன், துவாரகன், உமேஸ், சியாம், தனுஜன் ஆகியோரின் பாட்டியும் யோகரட்ணம், கண்மணி, தியாகரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வகுமாரியின் மைத்துனியும், சந்திரமோகனா ஸ்ரீகாந்தவேள் (கொழும்பு), ரட்ணகலா வித்தியாதரன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு பெரியதாயாரும், சுதர்சினி, சஞ்சீலன், துஷாந்தினி, திருசன் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2007) செவ்வாய்க்கிழமை 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்:
பிள்ளைகள்.

## அலெற்றா சவிரிமுத்து (மாரீசன்பதி, இளவாலை)



மாரீசன்பதி, இளவாலையை வசிப்பிடமாகக் கொண்டவரும் ஜேர்மனியில் தற்காலிகமாக வசித்து வந்தவருமான அலெற்றா சவிரிமுத்து (04.11.2007) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் இயற்கையெய்திவிட்டார்.

அன்னார் ஆறுமுகம் தியாகராசா (ஆயுள்வேத வைத்தியர், ஆறுமுகம் வைத்திய நிலையம், மாகியப்பிட்டி) அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஒடக்கரை வீதி,
சங்கானை. (67643)

தகவல்:
ஆ.தியாகராசா (சகோதரன்).

## திருமதி இராசபூமலர் நமசிவாயம்
### (அம்பிகைப்பிள்ளை - மூளாய்)

வட்டுக்கோட்டை மேற்கைப் பிறப்பிடமாகவும் மூளாயை வசிப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசபூமலர் நமசிவாயம் 04.11.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பி - சிவபாக்கியம் தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, தங்கரத்தினம்மா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற அம்பலவாணர் நமசிவாயம் அவர்களின் அன்பு மனைவியும் பாலேந்திரா, தவேந்திரா ஆகியோரின் பாசமிகு தாயும் இரங்கநாயகி (சிறி), கலாவதி (கலா) ஆகியோரின் மாமியும் பிரணவி, அருஷன், கார்த்திகா, தரங்கனி ஆகியோரின் அன்பு அப்பம்மாவுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.11.2007) செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மு.ப. 11.30 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் ஒரு மணிக்கு கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

26/12, பெர்னாந்து வீதி,
கொழும்பு - 06. (சி-54259)

தகவல்:
ந. பாலேந்திரா,
ந. தவேந்திரா (மகன்மார்).

## ஊடகவியலாளர் நேற்று விடுதலை

சந்தேகத்தின் பேரில் கைதான வீரகேசரி நிறுவனத்தின் வெளியீடான 'மெற்றோ நியூஸ்' பத்திரிகையின் ஊடகவியலாளர் உட்பட மூவர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

ஊடகவியலாளர் எம்.ஏ.பாஹிம், படப்பிடிப்பாளர் எம்.எஸ்.சலீம் மற்றும் வாகனச் சாரதி இராசேந்திரன் என மூவரும் கொம்பனித்தெருப் பகுதியில் வைத்து விமானப் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.


# தவறிவிட்டது

02.11.2007 கப்பலில் பயணித்தபோது ஒரேஞ்கலர் Bag ஒன்று தவறவிடப்பட்டுவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழுள்ள முகவரியில் தயவுடன் ஒப்படைக்கவும்.
மணியம் ஸ்ரோர்ஸ் மானிப்பாய் வீதி, உடுவில்.
(உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன்பாக).



# உடன் விற்பனைக்கு

National Panasonic TV, Deck, Washing Machine, SuperCup - 90 Batch Model, Computer P-iv உட்பட வீட்டுப்பாவனையிலுள்ள தளபாடங்கள்

தொடர்பு- தொ.பே. 0779491020,
0775925393
முற்பகல் 10 மணிக்கு முன்னர்
பிற்பகல் 2 மணிக்குப் பின்னர்
**இ.மகேஸ்வரன்**
316/1, பருத்தித்துறை வீதி,
(நாவலர் கல்வி நிலையம் முன்பாக).



# இறைச்சிக்கோழி மலிவு விற்பனை

இறைச்சிக் கோழி (கல்பேட்) மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் 24 அங்குல புதிய சிறிய லேடிஸ் சைக்கிளும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: ஞானசெந்தூரன்,
அபிராமிமகால், அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
T.P.: 021 226 3403.



SALES SALES SALES

# தீபாவளி அதிரடி மலிவு விற்பனை

03.11.2007 தொடக்கம் 08.11.2007 வரை

ORIGINAL SOFTWARE,
GAME CD - 75/=
ORIGINAL ACD
50/=முதல் 100/= வரை
ORIGINAL VCD MOVE - 75/=
மாடல் மந்திர சேர்ப்பாட்ட கசெட் - 50/=

ஏனைய அனைத்து வகையான DVD, VCD, MP3 இந்து, கிறிஸ்தவ பக்தி CDக்கள், கர்நாடக சங்கீத CDக்கள் என்பன விற்பனைக்கு உண்டு. இவை அனைத்துக்கும் 10 வீதம் முதல் 50 வீதம் வரை விலைக் கழிவு வழங்கப்படும். இச் சலுகை தீபாவளி தினம் வரை மட்டுமே.

**MUSIC WORLD**
141B, தபால்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி.

SALES SALES SALES SALES SALES SALES SALES SALES SALES


# மரண அறிவித்தல்

## செல்லையா இராசதுரை (சிவா)

கோயிலாக்கண்டி, கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லையா இராசதுரை (சிவா) நேற்று (05.11.2007) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் பொன்மணியின் அன்புக் கணவரும் இந்திரகுமார், மயூரன், சிந்துயா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் கோப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (06.11.2007) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.


ஓம்
சுவாமியே சரணம் ஐயப்பா

# பாலாலய கும்பாபிஷேகம்



உரும்பிராய் சந்தி முதல் ஒழுங்கையில் வீற்றிருக்கும் புதிய சிவ தர்ம சாஸ்த்தாவுக்கு நாளை (07.11.2007) புதன்கிழமை பகல் 9.03 மணி முதல் 10 மணிவரையிலான சுபமுகூர்த்த தினத்தில் பாலாலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெற சபரிமலை ஐயன் அருள் பாலித்துள்ளது. அடியார்கள், சுவாமிமார்கள் வந்து தரிசித்து ஐயப்பனின் அருள் பெறுவீர்களாக.

கார்த்திகை முதலாம் திகதி முதல் மகர ஜோதி மண்டல விரதபூசை, அபிஷேகம், பஜனை - படிப்பூசை என்பன நடைபெறவுள்ளன. சுவாமிமார்கள், மாலை போடுபவர்கள், உபயம் செய்ய விரும்புபவர்கள் எம்மிடம் ஐந்து நாள்களுக்கு முன் எமது இல்லத்தில் கலந்துகொள்ளவும்.

**சுவாமி சரணம்**

குறிப்பு: சபரிமலை செல்ல முடியாதவர்களுக்கு இருமுடி கட்டி 18 படி ஏறி நெய் அபிஷேகம்செய்யும் வசதி செய்து கொடுக்கப்படும்

இடம்: நவிண்டில் சுந்தர ஐயப்பன் ஆலயம்.

கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
உரும்பிராய். (67641)

குருசுவாமி,
தானு - வாசுதேவக்
குருசாமி.



# "சுகவாழ்வுக்கான பயணம்"

JOURNEY FOR HEALTHY LIFE JFHL JAFFNA

## குழந்தைகள்/ நோயாளர் பராமரிப்புச் சேவை

மேற்படி சேவைக்காக (ஆண், பெண்)
ஆள்கள் தேவை.
கல்வித் தகைமைகள் தரம் - 10
விதவைகள், வறுமைக்கோட்டின் கீழ்
உள்ளோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு:**
சுகவாழ்வுக்கான பயணம்,
கோணாவளை வைரவர் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (67637)


# கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் தி.வித்தககலாநிதி அவர்களின் அன்புத் தந்தை

## முத்தையா திருச்செல்வம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவு அலுவலகம்,
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (67644)

கூட்டுறவு அபிவிருத்தி உதவி
ஆணையாளர்களும்,
கூட்டுறவு அலுவலக உத்தியோகத்தர்களும்.

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை மகாலிங்கம்



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத் துரை மகாலிங்கம் (04.11.2007) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - தங்கரத்தினத்தின் புத்திரனும், காலஞ்சென்ற துரை மற்றும் இராஜேஸ்வரியின் மருமகனும், கலாமதியின் கணவரும், டனிஷா (அமெரிக்கா), றொசாந்தன், நிரூபன் (கனடா), செந்தூரன் (மாணவன் யாழ். இந்துக்கல்லூரி) ஆகியோரின் தந்தையும், செல்வமோகனின் (அமெரிக்கா) மாமனாரும் காலஞ்சென்ற வேலாயுதம், கனகலிங்கம் (பிரான்ஸ்), தனபாலசிங்கம் (மன்னார்), சந்திரவதனா (கொழும்பு), சகுந்தலாதேவி (பிரான்ஸ்), சாந்தி (லண்டன்) ஆகியோரின் சகோதரனும் வசுமதி, இந்திரா (கனடா), வளர்மதி (கனடா), வரதராஜா, உதயராஜா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.11.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில் (67646)

தகவல்
கலாமதி (மனைவி).
செந்தூரன் (மகன்).
(67128)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச்செல்வனின் இறுதி யாத்திரையின் போது....



# சர்வதேச சமூகத்தின் நியாயமின்மையே தமிழ்ச்செல்வனின் சாவுக்குக் காரணம்

## இறுதி வீரவணக்க நிகழ்வில் பொட்டு



கிளிநொச்சி, நவ. 6

சர்வதேச சமூகத்தின் நியாயத் தராசானது நியாயமின்றி நடந்து கொண்டது. அந்த நியாயமின்மையின்விலைதான் தமிழ்ச்செல் வனின் வீரச்சாவு.

இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுத லைப் புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் ச. பொட்டு.

நேற்று இங்கு நடைபெற்ற பிரிகேடியர் தமிழ்ச்செல்வனின் இறுதி வீரவணக்க நிகழ்வில் அஞ்சலி உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்த தாவது:

தேசியத்தலைவர் அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு அமைய அர்ப்பணிப்புக்களுடன் அரசியல் பணி செய்தவர் தமிழ்ச்செல்வன்.

தமிழ்ச்செல்வனின் அரசியல்திறன் என்பது உலகம் அறிந்தது. உலகம் முழுவதும் இன்று தமிழ்ச்செல்வனை பற்றி உரைக்கின்றது. அவரின் அரசியல் திறனைப்பற்றி கூறுகின்றது. அனைத்துலக ஊடகங்கள் எல்லாம் ஊடகங்களை அவர் கையாண்ட விதம் பற்றி கூறு கின்றன.

தமிழ்ச்செல்வன் எம்மைவிட்டு பிரிந்த விட்ட சூழலில் அனைத்துலக சமூகத்தின் நியாத் தராசு தொடர்பான எண்ணங்களும் கருத்துக்களும் எழுவது தவிர்க்கமுடியாது.

### தாயார் வருவதற்குத் தடை

இன்று தமிழ்ச்செல்வனின் குடும்பத்தினர் வருகை தர முடியவில்லை. தமிழ்ச்செல்வனின் தாயாரும் உடன்பிறப்புக்களும் கிளிநொச்சிக்கு வருகை தருவதற்கு சிறிலங்கா அரசு தடைவிதித்துள்ளது என்பது நோர்வேயால் எமக்கு பக்குவமாக கூறப்படுகின்றது.

உலகின் நியாயத் தராசானது ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கத்தில் எந்த வகையில் செயற்படும் என்பதை இன்று நாம் பார்க் கின்றோம். அனைத்துலக சமூகத்தின் முன்னால் எமது நியாயத்தை புரியவைத்து விடுதலை வேண்டி நிற்கும் ஓரினத்தின் குரலை தமிழ்ச் செல்வன் சரியாகவும் ஆணித்தரமாக வும் முன்வைத்தார்.

ஆனால், ஒரு படை பலம்மிக்க பொருளாதார பலம்மிக்க ஓர் அரசும் வேறெந்த உதவிகளும் தனித்து தமது விடுதலைக்காக போராடும் இனமும் ஒரே தராசில் வைக்கப்பட்டன. அனைத்துலக சமூகத்தின் நியாயத் தராசானது நியாயமின்றி நடந்து கொண்டது. அந்த நியாமின்மையின் ஒரு விலைதான் இன்றைய தமிழச்செல்வனின் வீரச்சாவு. தமிழ்ச் செல்வனின் வீரச்சாவுக்கு என்ன பதில் என்று கேட்கின்றார்கள்.

### உலகம் முழுவதிலும் உள்ள தமிழர் மனங்களில் விதைத்தார்

சிங்கள தேசம் தமிழ்ச்செல்வனை வீழ்த் தியதற்கு பதில் என்னென்று கேட்கிறார்கள். அதற்கு சொல்லக்கூடிய ஒருபதில் தான். ஒரு சில படையினரோ அல்லது ஓராயிரம் படையினரோ ஒரு சில அரசியல் தலைவர்களோ ஒரு சில வல்லாதிக்க சக்திகளோ தமிழ்ச்செல்வனின் உயிருக்கு ஈடாக முடியாது. தமிழீழம் என்ற உயர்ந்த கனவு தமிழீழத்திற்காக தமது உயிர்களை ஈந்த மாவீரர்களின் கனவை ஈடுசெய்ய உழைப்பதே தமிழ்ச்செல்வனின் உயிருக்கான விலை.

அந்த உணர்வு என்பது தமிழ்ச்செல்வன் உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்களின் மனங்களில் பதித்து விட்டுச் சென்றுள்ளார் என்று சொன்னால் அந்த உணர்வை இனி வரும் காலங்களில் சிங்கள தேசம் சந்திப்பது தான் - என்றார். (அ)

# போர்த் தர்மங்களையும் மீறி தமிழ்ச்செல்வன் கொலை

## கனிமொழி எம்.பி. வேதனை



ஈழத்தமிழ் மக்களின் துயரை புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் மறைந்ததன் பிற்பாடு உலகுக்குத் தெரிவித்துவந்த பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செலவன், போர் தர்மங்களை மீறி இலங்கை இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார் எனக் கருத்துக் கூறியிருக்கின்றார் கலைஞர் கருணாநிதியின் மகள் கனிமொழி எம்.பி.

தமிழ்நாட்டின் - திருவாரூரில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய அவர் - கூறியதாவது:

''ஈழத்தில் தமிழ் மக்களை அடக்கி - ஒடுக்கி - அழிக்க - துடிக்கும் இலங்கை அரசைப் பற்றியும் தமிழ் மக்களின் துயரங்களைப் பற்றியும் அன்ரன் பாலசிங்கம் மறைவுக்குப் பிறகு உலகுக்குத் தெரிவித்த போராளி தமிழ்ச்செல்வன். அவர் இன்று போர் தர்மங்களை மீறிக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

இதற்குத் தமிழகத் தமிழர்கள் ஒட்டுமொத்தமாக இரங்கலும் கண்டனமும் தெரிவித்துள்ளனர். அ.தி.மு.க. கூட்டணியில் இருக்கும் வைகோவும் கண்டனம் தெரிவித்துள்ளார். மாறாக தமிழ்ச்செல்வன் மறைவுக்கு முதல்வர் கருணாநிதி எழுதிய இரங்கல் கவிதைக்கு அ.தி.மு.கவின் தலைவி ஜெயலலிதா அம்மையார் மட்டும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இவரைத் தமிழக மக்கள் அடையாளம் கண்டுகொள்ளவேண்டும். தமிழ் மக்களுக்கும் ஜெயலலிதாவுக்கும் என்ன உறவு? இவரைத் தலைவராக ஏற்றுக்கொண்ட தமிழ் மக்கள் வெட்கப்படவேண்டிய, வேதனைப் படவேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது'' - என்றார் கனிமொழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி உதவியாளருக்கு மோட்டார் சைக்கிள்

பருத்தித்துறை கல்விக் கோட்டப் பாடசாலைகளில் மாணவர்களுக்கு உணவு வழங்குவதை மேற்பார்வை செய்யும் அபிவிருத்தி உதவியாளருக்கு மோட்டார் சைக்கிள் ஒன்றை உலக தரிசன நிறுவனம் வழங்கியுள்ளது. மாணவர்களுக்காக உணவு வழங்கப்படுவதை மேற்பார்வை செய்வதற்கு போதிய போக்குவரத்து வசதியின்மையைக் கருத்தில் கொண்டே அபிவிருத்தி உதவியாளருக்கு மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டுள்ளது. (203-160)

## மரண அறிவித்தல்கள்

### பரராஜசிங்கம் தருமராஜா (பவா)



(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், துறைமுக அதிகாரசபை, திருகோணமலை)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் ஹொலன்டை வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜசிங்கம் தருமராஜா காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான நா.சி.சரவணமுத்து - இரத்தினம் தம்பதியரின் மருமகனும் ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும் சுரேஷ், ரஜேஷ், கருணேஷ், ஜனேஷ், லாவண்யா ஆகியோரின் அருமைத் தந்தையும் காலஞ்சென்ற வர்களான புவனேஸ்வரி, ஞானேஸ்வரி, லோகேஸ்வரி மற்றும் மாணிக்கராஜா, மகேஸ்வரி, தனராஜா (நில அளவையாளர்), புஷ் பராஜா (நில அளவையாளர்), வியாழேஸ்வரி ஆகியோரின் சகோ தரரும் காலஞ்சென்றவர்களான அம்பிகைபாலன், சிவதாஸ், ரகு நாதன், நாகநாதன், மற்றும் மீனாட்சிப்பிள்ளை, பார்வதிப்பிள்ளை, குகதாசன், புவனேஸ்வரன், புவனேஸ்வரி, ஆகியோரின் மைத்துனரும் விஜிதா, கலாஜினி, நிதர்சினி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2007) செவ்வாய்க்கிழமை ஹொலன்டில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**சரா.புவனேஸ்வரன்**
(மைத்துனர்).
(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை).
392, நாவலர் வீதி, அரியாலை.

**ப.தனராஜா**
(சகோதரன்- நில அளவையாளர்).
55, நெடுங்குளம் வீதி,
அரியாலை.

(67633)

### பொன்னம்பலக் குருக்கள் நீலாம்பாள்



சங்கரத்தைக்குளத்தடி, சாத்திரியார்மடம், முருகமூர்த்தி கோயிலடியை பிறப்பிடமாகவும் பருத்தித்துறை, மருதடி வைரவர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலக் குருக்கள் நீலாம்பாள் (03.11.2007) சனிக்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சாதசிவம்ஐயர் - பொன்னம்மா தம்பதியரின் அன்புமகளும் பொன்னம்பலக்குருக்கள் அவர்களின் அன்பு மனைவியும் இரத்தினசபாவதி, விஜியராணி, மனோன்மணி, பாலச்சந்திரன், பவானி, பிரபாகரன், சுபாஸ்கந்தன் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

மருதடி வைரவர் கோயில்
பருத்தித்துறை. (67639)

**இ.பொன்னம்பலக் குருக்கள் (கணவர்).**

## முதுகலைமாணி பரீட்சை டிசெம்பர் 3 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.6

யாழ்.பல்கலைக்கழக முதுகலைமாணி பரீட்சைகள் டிசெம்பர் 3 அம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

முதுகலைமாணியில் அபிவிருத்தி, பிராந்திய திட்டமிடல், சனத்தொகை ஆகிய பரீட்சைகளே எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் இடம்பெறும்.

யாழ்.பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் பீடாதிபதி இதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார்.

இதே வேளை சகல முதுகலைமாணி மாணவர்களும் தமது ஆய்வுக் கட்டுரைகளை டிசெம் பர் 30 அம் திகதிக்கு முன்னர் வழங்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (203-95)

**கோழிக்குஞ்சு விற்பனைக்கு**

புறொயிலர் குஞ்சு உடன் விற்பனைக்குண்டு. **நல்லூர் பாம்**
19. முருகேசர் லேன், நல்லூர்.
(67627) (222-6944)

**வீடு வாடகைக்கு**

கோயில் வீதி, முதலாம் ஒழுங்கையில் (குழந்தை யேசு கோயில் முன் வீதி) தெலைபேசி வசதி உட்பட சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
*தொடர்பு:* இல. 466/4, கோயில் வீதி, முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(67630) T.P.: 021 222 8210.

**வீடு வாடகைக்கு**

திருநெல்வேலி, தலங்காவற் பிள்ளையார் கோயில் வீதியில் சகல வசதிகளுடனும் வீடு வாடகைக்கு உண்டு.
*தொடர்பு:* 758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(67634) T.P.: 0776621660.

**தவறிவிட்டது**

உடுவில் கிழக்கு, கற்பகப்பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த சுகுமாரன் - றஜிந்தன் என்பவருடைய தே.அ.அ.இல. (893193090v) உடுவிலுக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிடப்பட்ட விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (சன்மானம் வழங்கப்படும்).

**மணமகள் தேவை**

*யாழ்.இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த அத்தம், கிரக பாவம் 17, வயது 30, உதய செவ்வாய் அரசாங்க செயலகத்தில் கடமையாற்றும் அதிகாரிக்கு ஆசிரியர், வங்கி, மற்றும் பட்டதாரி அலுவலர் தேவை, (லண்டன், ஜேர்மன், பிரான்ஸ்) ஆகிய நாடுகளும் விரும்பத்தக்கது.*
*விளம்பர இல: 3023, மே/பா உதயன்.*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/ஊர்காவற்றுறை புனித மரியாள் (றோ.க.) மகளிர் வித்தியாலயத்தில்**
2007 ஆண்டு தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற

இ.மரிலாசெரோமி -162 ஜீ. றஜீவன் -153
கா.கஜலச்சி -144

ஆகிய மாணவர்களையும் அவர்களை சிறப்பாக வழி நடத்திக் கற்பித்த அதிபர், ஆசிரியர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அத்துடன் 2005 ஆம், 2006 ஆம் ஆண்டு க.பொ.த. (சாதாரணதரப்) பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களையும் அவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாடசாலை முன்னாள் ஆசிரியரும் குடும்பத்தாரும்.**
(67620)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

*எமது கிராமப் பாடசாலையான* யா/கரவெட்டி கிழக்கு அ.த.க. பாடசாலையில் *2007ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவிகளான*





செல்வி ஸரீனா இராசரத்தினம் — புள்ளிகள்-144
செல்வி துவிர்சனா அன்பழகன் — புள்ளிகள்-142

இவர்களுடன் சித்தியை அண்மித்த மாணவன் செல்வன் செல்லத்துரை தினேஸ்குமார் ஆகியவர்களைப் பாராட்டுவதோடு அவர்களை வழிநடத்தி கற்பித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டிக் கௌரவிப்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.

(சி/54252) **இந்துமாமன்றம்,** *கரவெட்டி கிழக்கு.*

## கண்ணீர் அஞ்சலி

*எமது பாடசாலை கணனிப் பிரிவு உதவியாளர்*
*திருமதி பா.சுபாசினி அவர்களின் கணவர்*

### ந.பாஸ்கரன்

*அவர்களின் திடீர்மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

ஆசிரியர் கழகம்,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
(சி/54253)

## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்
### 2008 ஆம் ஆண்டிற்கான
## கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் குத்தகைகள் சார்பில் 01.01.2008 தொடக்கம் 31.12.2008 வரையான காலப்பகுதிக்குரிய கேள்விகள் 23.11.2007 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் வல்வெட் டித்துறை நகராட்சி மன்ற அலுவலகத்தில் 23.11.2007 ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரம் மீளளிக்கமுடியாத படிவக் கட்டணமும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமும் பணமாகச் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும். கேள்விகள் அன்றைய தினம் (23.11.2007) பிற்பகல் 1 மணிக்கு திறக்கப்படும். கேள்வித் தொகையுடன் மேலதிகமாக 15% பெறுமதிசேர் வரியும் (வற்வரி) செலுத்தப்பட வேண்டும்.

இணைப்பிரதிகளாக வழங்கப்படும் கேள்விப் பத்திரத்தின் மூலப் பிரதி **"செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை"** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். கேள்விப்பத்தரத்தின் இணைப்பிரதி **"பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர், யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு இதே நேரத்தில் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

இது சம்பந்தமான நிபந்தனைகளையும் மேலதிக விவரங்களையும் இவ் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

### அட்டவணை

| இல. | குத்தகை விவரம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் | பெறுமதி சேர் (வற்) வரி |
|---|---|---|---|---|---|
| 01. | மாட்டிறைச்சிக்கடை, வல்வெட்டித்துறை | 363000/= | 3000/= | 300/= | 15% |
| 02. | மரக்கறிச் சந்தை, வல்வெட்டித்துறை | 240000/= | 2000/= | 300/= | 15% |
| 03. | மீன்சந்தை, வல்வெட்டித்துறை | 100000/= | 2000/= | 300/= | 15% |
| 04. | துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் (வல்வெட்டித்துறைப் பொதுச்சந்தை) | 180000/= | 2000/= | 300/= | 15% |
| 05. | தொண்டைமானாறு பேருந்து நிலையச் சிற்றுண்டிச்சாலை | 6800/= | 1000/= | 100/= | 15% |
| 06. | தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 69000/= | 1000/= | 100/= | 15% |

*நகராட்சி மன்ற அலுவலகம்,*
*வல்வெட்டித்துறை. 2007.11.02.*
(சி/54246)

க.அமிர்தலிங்கம்,
செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

### MEDIA RESOURCE AND TRAINING CENTRE

### POST OF DIRECTOR (ON CONTRACT)

The Media Resource and Training Centre is a joint venture of the University of Jaffna and the Institute of Further Education (FOJO)Sweden.

Applications are invited for the Post of Director (on contract) for the Media resource and Training center from suitably qualified energetic, proactive and experienced persons having a vision and rationale to develop media studies both professionally and academically.

**Required Qualifications and Experience:**

i. A Degree of a recognized University and a postgraduate degree with publications of high quality. Priority will be given to applicants with publications of related to **Media Studies**

ii. Minimum of 15 years experience in **academic administration** and/or in an **Executive position** in a Government Department State Corporation, Higher Educational Institution/Institute or in a recognized N.G.O

**General Conditions:**

This is a full-time assignment and initially it is for a period of **one year** from the date of commencement of the assignment. However, the assignment is renewable if the services rendered and work performance during the tenure of assignment is satisfactory.

Salary is negotiable and shall be determined based on the qualifications and experience of the selected candidate.

The appointee will become a contributor to the Employees Provident Fund (EPF) Media Resources and Training Center will contribute the EPF and the Employees Trust Fund.

Applicants are requested to submit along with curriculum vitae, the names of two non-related referees with their contact details including e-mail addresses and telephone numbers. They are also required to submit a statement of vision for the development of the MRTC. Prospective applicants presently employed in the Government Service or Higher Education Institutions/Institutes should forward their applications through the respective Heads **under confidential cover** to reach The Vice-Chancellor, University of Jaffna, Thirunelvely Jaffna on or before **30th November 2007** with the name of the post indicated on the top left hand corner of the envelope.

**Registrar**
**2007.11.05.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசின் இனவெறிக் கொடூரம் இது; இந்தியா இனியும் வேடிக்கை பார்க்கக்கூடாது



## தமிழ்ச்செல்வன் கொலை குறித்து இராமதாஸ்

சென்னை,நவ.6

ஈழத் தமிழர்களின் உரிமைக் குரலாம் தமிழ்ச்செல்வனைப் படுகொலை செய்த பாதகச் செயலை - இனவெறித் தாக்குதலை - மனித குலம் நிச்சயம் மன்னிக்காது. அதிலும் குறிப்பாகத் தமிழர்கள் மன்னிக்க மாட்டார்கள்.

தமிழ்ச்செல்வன் மரணம் தொடர்பாக பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் இராமதாஸ் சனியன்று அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் அப்படித் தெரிவித்திருக்கிறார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

ஈழத் தமிழர்களின் உரிமைக்குரலை உலக அரங்கில் ஒலித்து வந்த தமிழ்ச்செல்வனை, இலங்கை விமானப் படை யினர் குண்டுவீசிக் கொன்றுள்ளனர் என்ற செய்தி, உலகத் தமிழர்களுக்கு மட்டுமன்றி, அமைதியையும் மனித உரிமையையும் மதிக்கும் உலக மனித சமுதாயத்திற்கே பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. அமைதிக்கு எதிரான - மனித உரிமைகளுக்கு எதிரான - இலங்கை அரசின் போர்வெறி பிடித்த இந்த இனிவெறித் தாக்குதலை மனித குலம் நிச்சயம் மன்னிக்காது. அதிலும் குறிப்பாக தமிழர்கள் மன்னிக்க மாட்டார்கள்.

இலங்கை இனச்சிக்கலுக்கு அமைதிப் பேச்சு மூலம் தீர்வு காண்பதற்காக நோர்வே போன்ற நாடுகளின் முயற்சியால் நடைபெற்ற எல்லா அமைதிப் பேச்சுகளிலும் கலந்துகொண்டு ஈழத்தமிழர்களின் நியாயமான உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வந்தவர் தமிழ்ச்செல்வன். அவரின் மரணம் ஈழத் தமிழர்களுக்கெல்லாம் பேரிழப்பு. அவர்களின் சிக்கல்களுக்கு அமைதிப் பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கான முயற்சிகளுக்குப் பெரும் பின்னடைவு.

### தமிழ் இனத்தைப் பூண்டோடு அழிக்கும் வெறி கொண்டுள்ளது

தமிழ்ச்செல்வனைக் குண்டுவீசிக் கொன்ற படுபாதகச் செயல் மூலம், சமாதானத்திற்கான அமைதிப்பேச்சில் துளி அளவு கூட நம்பிக்கை இல்லை என்பதையும், ஈழத் தமிழர்களைப் பூண்டோடு அழித்து, இலங்கையில் தமிழ் இனத் தையே இல்லாமல் செய்வதன் மூலம் இனச்சிக்கலுக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற வெறியுடன் தான் செயற்பட்டுக் கொண்டிருப்பதையும் தெளிவாக்கியிருக்கிறது இலங்கை அரசு.

தமிழர்கள் வசிக்கும் கிழக்கு மாகாணத்தில் இலங்கை அரசு திட்டமிட்டு சிங்களவர்களைக் குடியமர்த்திக்கொண்டு வருகிறது. தலைநகர் கொழும்பில் பல்லாண்டு காலமாக வசித்து வரும் தமிழர்களை எல்லாம் துப்பாக்கி முனையில வெளியேற்றிக்கொண்டு வருகிறது. தமிழ் ஈழப் பகுதிகளில் 15 வயதுக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்களை எல்லாம் நள்ளிரவு நேரத்தில் வீடு புகுந்து கடத்திச் சென்று படுகொலை செய்து கொண்டிருக்கிறது. இத்தகைய அடாத செயல்கள் மூலம், உலகிலேயே மனித உரிமை மீறல்கள் அதிகம் நடைபெறுகின்ற நாடு என்று இலங்கை தன்னை அடையாளம் காட்டிக்கொண்டிருக்கின்றது. இதனால் ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமை மீறலுக்கு எதிரான அமைப்பின் கண் டனத்தையும் மனித உரிமைகளை மதிக்கும் உலக நாடுகளின் கண்டனத்தையும் இலங்கை அரசு பெற்றிருக்கிறது.

### இந்தியா இனியும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது

நமக்குக் கூப்பிடும் தொலைவில் உள்ள பக்கத்து நாட்டில் இத்தனை கொடுமைகளும் நடந்துகொண்டிருக்கின்றன. அங்கே கொடுமைகளுக்கு இலக்காகியிருக்கும் மக்களுடன் இனம், மொழி, கலாசாரம் ஆகியவற்றால் ஒன்றுபட்டுள்ள தமிழர்கள் வசிக்கும் இந்தியா, இதை இனியும் வேடிக்கை பார்த்துகொண்டு இருக்கக் கூடாது. ஈழத் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறையையும் படுகொலைகளையும் மனித உரிமைகளையும் அதற்கு காரணமான இராணுவ நடவடிக்கைகளையும் இந்தியா சகித்துக்கொண்டு இருக்கக் கூடாது.

ஈழத் தமிழர்களைப் பூண்டோடு அழித்து ஒழிக்கும் போர் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தி, பேச்சின் மூலம் ஈழத் தமிழர்களின் நியாயமான அரசியல் உரிமைகளையும் மனித உரிமைகளையும் வழங்கவேண்டும் என்று இலங்கையை இந்திய அரசு வற்புறுத்தவேண்டும். தாமதமின்றி இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தாய்த் தமிழகத்தில் உள்ள ஆறரைக் கோடி தமிழர்களின் சார்பில், இந்திய அரசுக்கு, தமிழக முதலமைச்சர் கருணாநிதி உணர்த்தவேண்டும். இதில் தாமதித்தால் இலங்கையின் தமிழ் இனமே கூண்டோடு ஒழிக்கப்பட்டுவிடும். இந்த ஆபத்தைத் தடுத்துநிறுத்த தாயகத்துத் தமிழர்கள் ஒன்றுபட்டுக் குரல்கொடுக்க முன்வரவேண்டும். இதுதொடர்பாக முதலமைச்சருக்கும் ஒரு கடிதம் எழுதி வலியுறுத்தியிருக்கின்றேன்'' - என்றார் அவர். (சி)

## இராணுவத்தினரின் வாகனம் 200 அடி பள்ளத்தில் வீழ்ந்தது

### 9 சிப்பாய்கள் படுகாயம்; துன்கிந்தவில் சம்பவம்

பதுளை, நவ.6

பதுளை, துன்கிந்தப் பகுதியில் இராணுவத்தினர் பயணம் செய்த வாகனம் ஒன்று 200 அடி பள்ளத்தில் வீழ்ந்ததில் அதில் பயணித்த 9 படையினர் காயமடைந்திருக்கின்றனர். சம்பவத்தில் வாகனமும் கடும் சேதங்களுக்குள்ளாகியிருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்தஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது. படையினரின் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்ததினாலேயே இந்த அனர்த் தம் ஏற்பட்டதாகப் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் காயமடைந்த படையினர் தற்போது பதுளை, அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக் கின்றனர். அவர்களில் ஐவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் தொடர்பாக பதுளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

## தம்பி தமிழ்ச்செல்வா! உன்னை எரிக்கவில்லை; ஏற்றியிருக்கிறோம்!

### இயக்குநர் பாரதிராஜா உணர்ச்சிக் கவிதை



'தம்பி தமிழ்ச்செல்வா! உன்னை எரிக்க வில்லை... ஏற்றியிருக்கிறோம்' என்று மறைந்த விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு தனது இறுதி அஞ்சலியை உணர்ச்சிபூர்வமான வசனக் கவிதையாக வெளியிட்டிருக்கின்றார் தமிழ்த் திரையுலகின் பிரபல இயக்குநர் பாரதிராஜா. அது வருமாறு:-

ஒரு விடிவெள்ளியைக் கொன்று புலர்ந்த இந்த வெள்ளி விடியாமலே இருந்திருக்கலாம்.

ஒரு அட்சயப் பாத்திரத்தை பிச்சைக் காரர்கள் தின்று தீர்க்க இந்த நாள் விழிக் காமலே இருந்திருக்கலாம்.

மரணத்தைக் கண்டு அஞ்சியதில்லை தம்பிகள்! அதுதான் அவர்களுக்கு முகவரி.

வலிகளும் அவர்களுக்கு புதிதல்ல! அவர்களின் இரணங்கள் - சாதாரணம்! தழும்புகளை நெஞ்சில் சுமந்த வீர மறவர்கள்!

என்றாலும் அவர்கள் கண்ணீரில் நனையும்போது இங்கே கரிக்கிறது- அங்கே அவர்கள் காயப்படும்போது இங்கு குருதி கொதிக்கிறது.

வான்வழியே விழுந்தது வெடி அல்ல- எங்கள் நெஞ்சில் விழுந்த இடி!!

தம்பி தமிழ்ச்செல்வா! நீ மாபெரும் இயக்கத்தின் அரசியல் வழிகாட்டி மட்டுமல்ல.

தம்பி பிரபாகரனைக் காண வீரமண்ணிற்கு எமை அழைத்துச் சென்று விருந் தோம்பி உபசரித்து மறத் தமிழ் மக்களின் மற்றோர் உலகை எனக்குக் காட்டியவனும் நீ தான்!

அதனால்தான் அன்றே என் அரசியல் காவியத்திற்கு உன் பெயரிட்டேனோ?

ஈழத்திற்கான அமைதிப் பேச்சுவார்த்தையை சமாதானப் பாதை நோக்கிய பயணத்தை உலகெங்கிலும் உள்ள அரசியல் அரங்குகளில் ஓங்கி ஒலிக்கச் செய்த தம்பியே! உமது இழப்பு ஈழத் தமிழர்களுக்கு மட்டுமல்லாது - உலக உருண்டையின் மூலை முடுக்கெல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கும் எம் தமிழர்கள் எல்லோருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்

அந்தோ! அன்று சிங்கத்தை இழந்தோம்! இன்று தங்கத்தை இழந்துவிட்டோம்!!

அகிம்சை வழியில் அறத்தை கையிலேந்திய திலீபனைக் கொன்ற கைகள்தான் இன்று உன்னையும் தின்றது!

திலீபன் இறந்தபோது அவன் தாய் கூறினாள் - 'திலீபனைப் புதைக்கவில்லை... விதைத்திருக்கிறோம்'

தம்பி தமிழ்ச்செல்வன் 'உன்னை எரிக்க வில்லை... ஏற்றியிருக்கிறோம்'

# தமிழ்ச்செல்வனின் இழப்பு ஆக்கிரமிப்புக்கு எதிராக ஒட்டுமொத்தத் தமிழரையும் தட்டி எழுப்பியுள்ளது

### வீரவணக்க நிகழ்வில் புலித்தேவன் தெரிவிப்பு



கிளிநொச்சி,நவ.6

''அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல் வனைப் படுகொலை செய்த இலங்கைக் குத் தக்க பதிலடியை நிச்சயம் எமது தேசியத் தலைவர் தருவார் - என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் சீவரத்தினம் புலித்தேவன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற சு.ப.தமிழ்ச்செல்வனுடன் வீரச்சாவ டைந்த ஐந்து போராளிகளின் வீரவணக்க நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

1987ஆம் ஆண்டு எங்கள் மூத்த தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட 12 வேங்கைகளை இழந்தோம்.

அதைப்போலவேதான் எமது அரசியல் துறைப் பொறுப்பாளரையும் இப்போது இழந்திருக்கிறோம்.

இத்தாக்குதலில் சிக்கிய எங்கள் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அண்ணாவையும் ஏனையவர்களையும் காப்பாற்றுவதற்குத் தீவிரமாக முயற்சித்தோம். ஆனாலும், எங்கள் முயற்சிகள் கைகூடவில்லை.

அவர்களின் பக்கங்கள் அனைத்தையும் வெளியில்கூறிவிட முடியாது. எங்கள் மக்களின் விடுதலைக்காக தமிழீழத்தில் எதிரிக ளுடன் போரிட்டும் ஒருபுறம் வெற்றிகளைச் சாதித்தாலும் மறுபுறம் அனைத்துலகம் வரை எங்களின் உரிமைகளைத் தட்டிக்கேட்டவர்கள் அவர்கள்.

அரசியல்துறைப் பொறுப்பாளர், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தை அனைத்துலக நாடுகள் பலவற்றிடம் எடுத்துக்கூறி எங்களின் போராட்டத்திற்கு வலுச்சேர்த்திருந்தார். அதற்காக தென்னாபிரிக்கா முதல் பல்வேறு நாடுகளுக்கும் அவர் சென்றிருந்தார்.

எங்கள் போராட்டத்தின் நியாயத்தையும் சிங்கள அரசால் இழைக்கப்படுகின்ற கொடுமைகளை வெளிப்படுத்தவும் கால நேரமில்லாமல் உழைத்தார்கள். அனைத்துலக நாடுகளுக்கு நாங்கள் சென்றிருந்த காலப்பகுதியில் ஓய்வின்றி பல்வேறு அனைத்துலக நாட்டுப் பிரதிநிதிகளையும் சந்தித்து எங்கள் நியாயங்களை வெளிப்படுத்தினார்கள்.

தமிழ்ச்செல்வன் அண்ணாவுக்கு நீண்ட பின்னணி இருக்கிறது. இந்திய இராணுவக் காலத்தில் இந்தியப் படைகளுக்கு எதிராகக் கடுமையான தாக்குதல்களை நடத்தி பேரிழப்பை ஏற்படுத்திக்கொண்டிருந்தார். அதனால் தமிழ்ச்செல்வன் அண்ணாவை ஆயிரக்கணக்கான இந்தியப் படைகள் தேடி அலைந் தனர்.

இந்தியப் படைகளுக்கு எதிராக தொடர்ச்சியாக நின்றுபிடித்து எதிரிக்கு பேரிழப்பை ஏற்படுத்திய சலிக்காத போராளியாகச் செயற்பட்டார். திலீபன் அண்ணாவின் நினைவு நாள் ஒன்றில் இந்தியப்படைகள் சில நாட்கள் போர் நிறுத்தம் செய்திருந்தனர். இந்த அமைதிக் காலத்தில் தமிழ்ச்செல்வன் அண்ணா, அணியுடன் வீதியால் சென்று கொண்டிருந்தபோது இந்தியப் படைகள் திடீரென வந்து வழிமறித்துக்கொள்ள இருவருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. இந்தியப் படையினர் தாக்குதல் நடத்தவேண்டாம் உங்களுடன் கதைக்கவேண்டும் என்று கேட்கின்றனர்.

அவர்களின் வேண்டுதலுக்கு இணங்க இரண்டு தரப்பும் ஒரு தீர்மானத்தின் படி சந்தித்துக்கொள்கின்றனர். அப்போது அந்த இந்தியப் படை அதிகாரி, தினேஸைச் சந்திக்க வேண்டும் என்று கேட்கின்றனர். அதற்கு இவர் ''அவரைச் சந்திக்க முடியாது அவர் நூற்றுக்கணக்கான போராளிகளுடன் வேறு ஓரிடத்தில் இருக்கிறார்'' - என்று கூறினார். ''எதுவானாலும் எங்களுக்கு கூறுங்கள், நாங்கள் அவருக்குச் சொல்கிறோம்'' - என்று தெரிவித்தார்.

அந்த இந்தியப்படை அதிகாரிக்கு, தான் கதைத்துக் கொண்டிருப்பவர்தான் தினேஸ் என்பதை அறியாது, ''தினேஸ் சிறந்த வீரர். அவரின் திறமை எங்களுக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அவரைப் பார்க்க வேண்டும்'' என்று கூறி தமிழ்ச்செல்வன் அண்ணாவின் போரியல் திறமைகளைப் பாராட்டிக்கொண்டிருந்தார். அந்த அளவுக்குச் சிறந்த தளபதியாகச் செயற்பட்டிருந்தார் அவர்.

அரசியல் நடவடிக்கைகளில் அவருக்கு எப்படித்திறமை இருந்ததோ அதனைப்போல அவருக்குப் போரில் தனித்திறமை இருந்தது. மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைக் கவனிப்பது முதல் இராஜதந்திரிகளைக் கையாள்வது வரை அவருக்கு தனித்திறமை இருந்தது. மக்களின் பிரச்சினைகள் எதுவானாலும் சரி அவற்றை இலகுவாகத் தீர்ப்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்.

கோத்தபாய ராஜபக்ஷ, தான் இன்றுதான் மகிழ்வாக இருக்கிறார் எனக் கூறியிருக்கிறார்.

இந்த இழப்பிற்கு தக்க பதிலடியை எங்கள் தேசியத் தலைவர் நிச்சயம் கொடுத்தே தீருவார். இந்தப் போராளிகளின் இழப்பு ஒட்டுமொத்த தமிழர்களையும் ஆக்கிரமிப்பதற்கு எதிராக எழுப்பிவிட்டுள்ளது. நிச்சயம் நாங்கள் தமிழீழத்தை அடைவோம் - என்றார் அவர். (சி)

## ஐரோப்பிய நாடாளுமன்றப் பிரமுகர் தமிழ்ச்செல்வனின் மறைவுக்கு இரங்கல்

கொழும்பு,நவ.6

பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் மறைவு குறித்து தான் மிகவும் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளார் என ஐரோப்பிய நாடாளு மன்றத்தின் தெற்காசிய விவகாரங்களுக்கான தலைவர் றொபோட் ஈவான்ஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியின் விவரம் வருமாறு:-

சு.ப.தமிழ்ச்செல்வன் மறைவு குறித்து அதிர்ச்சியும் வருத்தமும் அடைந்தேன். ஆனால், இருதரப்பையும் மேலும் போரில் மூழ்க வேண்டாம் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். நான் சு.ப.தமிழ்ச் செல்வனை நன்கு அறிவேன். கிளிநொச்சியிலும் பிரசெல்ஸ்ஸில் உள்ள எமது ஐரோப்பிய நாடாளுமன்றத்திலும் அவரை நான் பலமுறை சந்தித்திருக்கிறேன்.

அவர் எப்போதும் நட்புடன் பழகியவர். தமிழ் மக்களினது அபிலாசைகளை தனது நெஞ்சில் சுமந்தவர். இலங்கை முழுமைக்குமே அமைதி முயற்சிகளின் முக்கியத்துவம் குறித்து அறிந்திருந்தவர்.

அவரது மரணம் குறித்து மிகவும் கவலையும் அதிர்ச்சியும் அடைகிறேன். தமிழ்ச்செல்வனின் துணைவியார் மற்றும் குழந்தைகளுக்கும் பாரிய இழப்பைச் சந்தித் திருக்கும் தமிழ் மக்களுக்கும் எமது இதய பூர்வமான இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இலங்கை இராணுவத்தின் இத்தாக்குதல் குறித்து நான் திகைப்படைகிறேன். அமைதி முயற்சிகளை முன்னெடுக்க இந்த வன்முறையும் இரத்தக்களறியும் எப்படி உதவும்?

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும் என்று அனைத்துத் தரப்பையும் கேட்டுக்கொள்கிறேன். இராணுவ நடவடிக்கைகள் அனைத்தையும் கைவிட்டு தீர்வுகாண முன்வரவேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கேட்டுக்கொள்கிறேன் - என்று அதில் அவர் தெரிவித்துள்ளார்.(சி)

## மேலும் ஆயிரத்து 180 கோடி ரூபாவுக்கு குறைநிரப்புப் பிரேரணை இன்று வருகின்றது

கொழும்பு, நவ. 06

இந்த ஆண்டுக்கான அரசின் மேலதிக செலவீனங்களை ஈடுசெய்வதற்காக மேலும் 6 ஆயிரத்து 180 கோடி ரூபாவிற்கான குறைநிரப்புப் பிரேரணை இன்று அரசால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பாதுகாப்பு, 'மிஹின் எயார்', சுங்கத் திணைக்களம், உரமானியம், சமுர்த்தி, பாடசாலைப் புத்தகங்கள் மற்றும் ஓய்வூதியம் உள்ளிட்ட பலவற்றிற்கு இந்த நிதி பகிர்ந்தளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்று காலை 9.30 மணியளவில் நாடாளுமன்றம் சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டாரவின் தலைமையில் கூடும்.

மனுத் தாக்கல் மற்றும் கேள்வி - பதில் ஆகியவழமையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து இக்குறைநிரப்புப் பிரேரணை அரசால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அதன்மீதான விவாதம் தொடக்கிவைக்கப்படும். மாலையில் இப்பிரேரணையை நிறைவேற்றுவதற்காக அதன் மீது வாக்கெடுப்பு இடம்பெறும்.

இன்று செவ்வாய்க்கிழமை அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாதத்திற்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதம் இடம்பெறும்.

நாளை 2008 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் சபையில் சமர்ப்பிக்கப்படும். வியாழக்கிழமை தீபாவளி விடுமுறை என்பதால் வெள்ளிக்கிழமை இந்த வரவு - செலவுத்திட்டம் மீதான விவாதம் அரம்பமாகும். ஒரு மாதத்திற்கு குழுநிலை விவாதம் தொடரும். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமானப் பொதிகள் சேவை

உங்கள் பொருள்கள் யாழ்.- கொழும்பு அல்லது கொழும்பு - யாழ். தினசரி விமானம் மூலமாக உடனுக்குடன் உத்தரவாதத்துடன் அனுப்பி வைக்கப்படும். உங்களுக்குத் தேவையான பொருள்களைக் கொழும்பில் கொள்வனவு செய்து அனுப்பிவைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்து தரப்படும். அத்துடன் பூதவுடல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். தேவை ஏற்படின் விமானம் சாட்டற் (Charted) செய்து கொடுக்கப்படும்.

| கொழும்பு - யாழ். | SUB DEALERS | யாழ். கொழும்பு |
|---|---|---|
| 1Kg 250/= | தேவை | 1Kg 200/= |

**EURO GROUP OF COMPANIES**

35, STATION RD., MOUNT LAVINIA. TEL.0113846998, 0114542190, FAX: 0114542360.
WELLAWATTE BRANCH: 11, VIHARA LANE, COL-06.
TEL: 0114969116, 0773661891.
JAFFNA BRANCH: 22,WYMAN RD.
TEL: 0212223974, 0774207963 (C54198)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 ★ 02 ★ 1947



உதிர்வு 18 ★ 10 ★ 2006

**அமரர் நாகேந்திரம் கணேசராஜா**
*(முன்னாள் அதிபர், அளவெட்டி சதானந்த வித்தியாலயம்)*

அன்புடனும் பாசத்துடனும் எங்களை
வளர்த்த அப்பாவே!
எங்கள் வீட்டு ஒளி விளக்கே!
எங்கு சென்றீர் எம்மை விட்டு
இனி என்று காண்போம்
உங்கள் திருமுகத்தை
நீங்கள் மறைந்தாலும் உங்கள்
நினைவுகள் ஒருபோதும்
எம்மை விட்டு நீங்காது
ஆயிரம் உறவுகள் வந்தாலும்
அப்பா உங்களுக்கு நிகராகுமா?
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

'திருப்பதி இல்லம்',
சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்.
077 6505128 (67613)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளை.

## கரவெட்டி வைத்தியசாலையில் நீரிழிவு சிகிச்சை ஆரம்பம்

கட்டைவேலி,நவ.6

கரவெட்டிப் பிரதேச அரசினர் மத்திய மருந்தக வைத்தியசாலையில் நீரிழிவு சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதி சனிக்கிழமை தோறும் நீரிழிவு நோய்க்கான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (203-275)

## மழைநீர் தடுப்பணையை விசமிகள் சேதப்படுத்தியுள்ளனர்

யாழ்ப்பாணம்,நவ.6

காரைநகர் அபிவிருத்திச் சபையினால் காரைநகர் சுப்பிரமணியம் வீதியில் அமைக்கப்பட்ட மழைநீர் தடுப்பணையினை விசமிகள் உடைத்துச் சேதப்படுத்தி உள்ளனர்.

இது தொடர்பாக கிராம சேவையாளரிடமும் உரிய அதிகாரிகளிடமும் விவசாயிகள் முறையிட்டுள்ளதுடன் இது போன்ற சம்பவம் மீண்டும் இடம்பெறாமல் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு லண்டனிலுள்ள காரை நலன்புரிச் சங்கத்தினால் வழங்கப்பட்ட இரண்டு லட்சம் ரூபா நிதி மூலம் மேற்படி தடுப்பணையும் மதகுகளும் புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(203-250)


## கல்பேட்ஸ் விற்பனைக்கு

கல்பேட்ஸ் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 17, நாவலடி ஒழுங்கை,
பேச்சியம்மன் கோயிலடி,
வண்ணார்பண்ணை.
(67621)

## SPOKEN ENGLISH

Spoken English CDகள், சிறுபிள்ளைகளுக்கான Learning English VCDகள், Learn to Speak English (Soft ware) CDகள் விற்பனைக்குண்டு.

பூபாலசிங்கம் புத்தகசாலை,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (67418)

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறோயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

* றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
* மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
* திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப்புளியடி.
* கோல்டன் பாம் - பருத்தித்துறை.
* P.ரவி - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

T.P.No:- 222 3529,
222 2867 (67384)


## மணி விழா வாழ்த்து

இன்று (06.11.2007) செவ்வாய்க்கிழமை அகவை அறுபதில் மணிவிழாக் காணும் உயர்திரு.



**சோ.தில்லைநாதன் J.P.**

அவர்கள்
(B.A., Dip. in Edu., SLPS - I)

எமது வித்தியாலயங்களின் பழைய மாணவர், எமது கிராமத்தின் மூன்று பாடசாலைகளிலும் முறையே ஆசிரியராகவும், பிரதியதிபராகவும், அதிபராகவும் நற்பணியாற்றியதுடன் கொத்தணி அதிபராகவும், கோட்டக் கல்விப்பணிப்பாளராகவும், அரும் பெரும் சேவையாற்றியதை நன்றியுணர்வோடு போற்றுகின்றோம். மணிவிழாக் காணும் இந்நன்நாளில் பெரியாரும் குடும்பத்தினரும் சகல நலன்களுடனும் வாழ எல்லாம் வல்ல நயினை ஸ்ரீ நாகபூசணித் தாயைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
யா/நயினாதீவு நாகபூஷணி வித்தியாலயம்,
யா/நயினாதீவு கணேச கனிஷ்ட ம.வித்.,
யா/நயினாதீவு மகா வித்தியாலயம்.
(67593)

## 45ஆம் நாள் நினைவலைகள்



**குலேந்திரமோகன் சுதாகர்**
**(கண்ணன்)**
*(ஜதாஸ் சுவைத்தென்றல் உரிமையாளர் - பருத்தித்துறை)*


நீங்காத உன் நினைவலைகள்
நிழலாகத் தொடருதப்பா ..!
தாங்காது தவிக்கின்றோம் - தங்கமே
உன் பிரிவுத் துயரதனால் ...!
கண்மூடும் வேளையிலும் உன்
கனிமுகம் கனவாகத் தோன்றுதப்பா.

பாச உறவுகள்:
இந்திரா (சிறியதாயார்)
குடும்பத்தினர்.

ஐயனார் வீதி,
பருத்தித்துறை. (கி/54244)

# 45ஆம் நாள் கண்ணீர்ப் பூக்களும் நினைவஞ்சலியும்

# அமரர் குலேந்திரமோகன் சுதாகர் (கண்ணன்)




காலன் வருவது காலத்தின் விதி
என்பது நியதியே! ஆனால்
காலம் வராமலும் காலன்
வருவதும் கடவுள் நியதியோ?
பூவும் பிஞ்சும் உதிருவது
இயற்கையே! ஆனால்,
பூவையும் பிஞ்சையும் பிய்த்தெறியும்
அரக்கத் தனமும் இயற்கையோ? அன்றி
அரக்கத் தனமும் கடவுளை மீறுகின்றதோ
இக்காலத்தில்?
விடைகள் புரியவில்லை இறைவனே
விடைகள் புரியவில்லை!

குலேந்திரமோகன் சுதாகர் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (06.11.2007) செவ்வாய்க்கிழமை காலை 6 மணியளவில் புலோலி மேற்கு, தெணியம்மன் ஆலய முன்றலில் அமைந்துள்ள மண்டபத்தில் நடைபெற்று, முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் சபிண்டீகரணக் கிரியைகள் நடைபெறும். இந்த ஆத்மசாந்திப்பிரார்த்தனையில் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அறிவித்தலைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ஆறாத்துயருடன்:
**குடும்பத்தினர்.**

ஐயனார் வீதி, கலட்டி,
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதை, உரம் விநியோகம்

நவாலி,நவ.6

'கியூடெக்ஸ்' நிறுவனம் ஆனைக் கோட்டை ஜே.133 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கையாளர் 35 பேருக்கு அப்பகுதி விவசாய சம்மேளனத்தினூடாக விதைகள், உர வகைகள் என்பவற்றை வழங்கியுள்ளது. (203-100)

## கட்டாக்காலி மாடுகளால் நோயாளர்கள் சிரமம்

யாழ்ப்பாணம்,நவ.6

சாவகச்சேரி மாவட்ட மருத்துவமனையில் இரவு வேளையில் கட்டாக்காலி மாடுகள் நடமாடுவதால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவமனை வேலிகள் ஊடாக நள்ளிரவு வேளையில் உள்நுழையும் கட்டாக்காலி மாடுகள் வளாகத்தினுள் காணப்படும் வாழைகள், மரக்கன்றுகள் ஆகியவற்றை அழித்து வருவதாகவும் மாடுகளைக் கண்டு நாய்கள் குரைப்பதால் நோயாளர்கள் நித்திரை கொள்ள முடியாது அவதியுறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (203-207)

## யாழ்.போதனா வைத்தியசாலை மகப்பேற்று விடுதியில் உள்ள மலசலகூடக் கதவு சேதம்

யாழ்ப்பாணம்,நவ.6

யாழ்ப்பாண்ம் போதனா வைத்தியசாலை மகப்பேற்று விடுதியில் உள்ள மலசல கூடத்தின் கதவு சேதமடைந்துள்ளமையால் விடுதியில் தங்கியுள்ளவர்கள் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றார்கள்.

மகப்பேற்று விடுதியில் 22ஆம் விடுதியின் மலசலகூடத்தின் கதவே சேதமாகியுள்ளது.

குறிப்பிட்ட கதவு கழன்ற நிலையில் இருப்பதினால் கர்ப்பிணித்தாய்மார் உட்பட அனைவரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனால் தாங்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாகக் கற்பிணித்தாய்மார் தெரிவிக்கின்றனர்.

எனவே உரியவர்கள் விரைவில் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவர்கள் கேட்டுள்ளனர். (203-68)

## வடமராட்சி வலய சிறுவர்அரங்கப் போட்டி முடிவுகள்

வடமராட்சி,நவ.6

வடமராட்சி கல்வி வலயத்தினர் கோட்ட மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையே நடத்திய சிறுவர் அரங்கப் போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகளின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

**மருதங்கேணிக் கோட்டம்**

முதலாம் இடம் - குடத்தன்ன அரசினர் தமிழ்க்கலைவன் பாடசாலை நாடகம்: ''ஒற்றுமையே பலம்'', இரண்டாம் இடம் - மணற்காடு றோமன் கத்தோலிக்க பாடசாலை நாடகம்: ''ஒட்டுவிடு'', மூன்றாம் இடம் - நாகர் கோவில் மகாவித்தியாலயம் நாடகம்: ''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு'',

**பருத்தித்துறைக் கோட்டம்**

முதலாம் இடம் - கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை நாடகம்: ''சூழலைக்காப்போம்'', இரண்டாம் இடம் - தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் நாடகம்: ''இளவரசன் சிலை'', மூன்றாம் இடம் - புற்றளை மகாவித்தியாலயம் நாடகம்:''கூடி வாழ்''

**கரவெட்டி கல்விக் கோட்டம்**

முதலம் இடம் - நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை நாடகம்: ''துணிவே துணை'' இரண்டாம் இடம் - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி நாடகம்: ''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு'', மூன்றாம் இடம் - கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம் நாடகம்: ''உயிர்கள் அனைத்தும் உறவன்றோ'' (160)

## வாதரவத்தை மயானத்தில் தங்குமிடக் கட்டடம் இல்லை

வடமராட்சி,நவ.6

புத்தூர் வாதரவத்தை இந்து மயானத்திலுள்ள தங்குமிட கட்டடத்தில் கூரை இன்மையால் தகனக்கிரியைகளுக்காக மயானத்திற்கு செல்வோர் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்தகால இடம்பெயர்வுகளின் போது இக்கட்டடத்தில் இருந்த கூரைகள் யாவும் காணாமல் போயிருந்தன.

இதன் பின்னர் இக்கட்டடத்திற்குக் கூரை போடப்படாமையினால் தகனக்கிரியைகள் மற்றும் கிரியைகளுக்குச் செல்வோர் வெய்யிலிலும் மழையிலும் நின்று தமது கடமைகளைச் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (203-160)

## குடத்தனை, பொலிகண்டி மீள்குடியேற்ற வீட்டுத்திட்ட பயனாளிகளை விரைவில் விண்ணப்பிக்கக் கோரிக்கை

வடமராட்சி,நவ.6

குடத்தனை, பொலிகண்டிப் பகுதிகளிலுள்ள வீட்டுத்திட்டப் பயனாளிகள் தங்களுக்குரிய விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து வீட்டுப் பின்னணியுடன் எடுக்கப்பட்ட குடும்பப் புகைப்படத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் விரைவாக அதற்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று மருதங்கேணி உதவி அரச அதிபர் எம்.சிறிஸ்கந்தகுமார் தெரிவித்துள்ளார்.

குடத்தனை, பொலிகண்டி ஆகிய மீள் குடியேற்றக் கிராமங்களில் வீடுகளை அமைத்து வருபவர்களுக்கே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாகர் கோயில் தெற்கிலிருந்து இடம்பெயர்ந்த 120 குடும்பங்களுக்கு 'யு.என்.கபிற்றற் திட்டத்தின் கீழ் குடத்தனை, பொலிகண்டி ஆகிய இடங்களில் வீடமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சனசமூக நிலையம், பொதுமண்டபம், விளையாட்டு மைதானம், குறுக்கு வீதிகள் என்பன கொண்ட இவ்வீட்டுத்திட்டம் ஒரு மீள்குடியேற்றக் கிராமமாக அமையவுள்ளது.

இந்த வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடுகளை அமைக்க ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் தலா 4 லட்சத்து 65 ஆயிரம் ரூபாவை யு.என்.கபிற்றற் நிறுவனம் வழங்கவுள்ளது. இந்நிதி உதவி கட்டம் கட்டமாக வழங்கப்படவுள்ளது. (203-160)

## சங்கானை அ.மி.த.கவிற்கு கணனி மற்றும் உபகரணங்கள்

சங்கானை ஸ்தான அ.மி.த.க பாடசாலைக்கு கணனி இயந்திரம் ஒன்றும் கற்றல் உபகரணங்களும் பாடசாலை மாணவர்களுக்கான சப்பாத்துகளும் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், கணனிப் பாவனைக்கான அறை ஒன்றை கட்டிக் கொடுக்கவும், மாணவர்களுக்கான அனைத்து வசதிகளைச் செய்து கொடுக்கவும், இந்நிறுவனம் உறுதியளித்துள்ளதாக பாடசாலை அதிபர் ஆ.பேரின்பநாயகம் தெரிவித்துள்ளார். (203-29)

## கேதார கௌரிவிரத நூல்களைப் பெறலாம்

சுழிபுரம்,நவ.6

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் கேதார கௌரிப் பாடல்கள் அடங்கிய நூலை அனைவரும் பெற்றுக் கொள்ள முடியும்.

தினமும் 'கேதார கௌரி பூசை வழிபாடுகள் நண்பகல் வேளையில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. பூசை முடிவில் அனைவராலும் கேதார கௌரி விரதப் பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன.

ஆலய பூசை நடைபெறும் வேளைகளில் ஆலய அலுவலகத்தில் பாடல் நூலைப் பெற்றுக் கொள்ளலாம். (203-28)

## வாய்க்கால்கள் துப்புரவு

தற்சமயம் பெய்து வரும் பருவமழை காரணமாகத் தண்ணீர் ஓடும் வாய்க்கால்களைத் துப்புரவு செய்யும் பணிகளை மாநகரசபை முன்னெடுத்துள்ளது.

எனினும் ஒருசில வடிகால்களை புனரமைக்ககூடிய சாத்தியங்கள் தற்போதைய நிலையில் இல்லை எனவும் யாழ்.மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (203-111)

# சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி பாடசாலை மாணவரிடையே கட்டுரைப் போட்டி

## மனித உரிமைகள் ஆணைக்குழு நடத்துகிறது

யாழ்ப்பாணம்,நவ.6

சர்வதேச மனித உரிமைகள் தினம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. இதனையொட்டி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பாளரினால் ஐந்து வலயங்களின் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மூன்று பிரிவுகளாக இந்தக் கட்டுரைப் போட்டி நடத்தப்படவுள்ளது. முதலாவது பிரிவில் தரம் 6, 7, 8 மாணவர்கள் 'சிறுவர் உரிமைகளும் கடமைகளும்' என்ற தலைப்பிலும், இரண்டாவது பிரிவில் தரம் 9, 10, 11 மாணவர்கள் 'சர்வதேச மனித உரிமைகள் தினம்' என்ற தலைப்பிலும், மூன்றாவது பிரிவில் உயர்தர வகுப்பு மாணவர்கள் 'மனித உரிமைகளும் யாழ். மாவட்ட மக்களும்' என்னும் தலைப்பிலும் கட்டுரைப் போட்டியில் பங்கு பற்றுவார்கள்.

வலய மட்டப் போட்டிகள் இம்மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி முடிக்கப்படும். ஒவ்வொரு பிரிவிலும் வலய மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோர் மாவட்ட மட்டப் போட்டியில் பங்கு பற்றுவார்கள்.

வலய மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கும், மாவட்ட மட்டத்தில் வெற்றி பெறுவோருக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கவுள்ளது. (50)



யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் சமுதாய மருத்துவத் துறையினரால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஆஸ்துமா குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கில் வைத்திய கலாநிதி திருமதி திருமகள் சிவசங்கர், மருத்துவபீட மாணவன் ஆர்.முரளிதரன் ஆகியோர் உரையாற்றுவதையும் -

சுவாசத்திற்கான செயல்முறைப் பயிற்சி ஒன்று செய்துகாட்டப்படுவதை அடுத்த படத்திலும் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : லக்ஸ்மன்)

## இரவில் நீண்ட நேரம் மின்சாரம் துண்டிப்பு வலி.தென்மேற்கு, வலி.மேற்கு மக்கள் சிரமம்

வலி.தென்மேற்கு,நவ.6

வலி.தென்மேற்கு மற்றும் வலி.மேற்கு பிரதேசங்களில் நீண்ட நாள்களாக இரவு வேளைகளில் மின்வெட்டு இடம்பெற்று வருவதால் மின் பாவனையாளர்கள் பலத்த சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

தினமும் மாலை ஆறு மணியானவுடன் மின் விநியோகம் முற்றாக நிறுத்தப்பட்டு பின்பு இரவு ஒன்பது மணிக்குப் பின்னர் மீண்டும் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இதனால் மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது சிரமமடைந்து வருகின்றனர். அத்துடன் அரச உத்தியோகத்தர்களும் தமது வேலைகளை உரிய நேரத்தில் மேற்கொள்ள முடியாது சிரமமடைந்து வருகின்றனர்.

இந்நிலையில் மண்எண்ணெயின் விலையும் மிகவும் உயர்ந்துள்ளது. இதனால் இரண்டுக்கு மேற்பட்ட விளக்குகளை எரிக்க முடியாத நிலையில் மக்கள் உள்ளனர்.

அத்துடன் இரவில் திருடர்களின் அட்டகாசமும் அதிகரித்துள்ளது. மின்சாரம் இல்லாத நேரத்திலேயே இவர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. மழைகால இருட்டு நீண்ட நேரம் இருப்பதால் வீடுகளில் மின் வெளிச்சம் மிகவும் அவசியமாகின்றது.

எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனமெடுத்து இரவு வேளைகளில் மக்களுக்கு பயன்படும் வகையில் மின்சாரம் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்றும் மக்கள் கேட்டுள்ளனர். (203-135)

## ஆனைக்கோட்டை வயற்பகுதிகளில் கட்டாக்காலிகளின் அட்டகாசம் அதிகரிப்பு

### பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை

நவாலி,நவ.6

ஆனைக்கோட்டைப் பகுதி வயல்களிலுள்ள நெற்பயிர்களை கட்டாக்காலி ஆடு, மாடுகள் அழித்து வருவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். அத்துடன் விவசாய சம்மேளனத்திடமும், ஆனைக்கோட்டை கிராம சேவையாளரிடமும் முறையிட்டுள்ளனர்.

பெருமளவான மாடுகள் பகல் இரவு வேளைகளில் ப[illegible] அழித்து வருவதாகவும் இதனால் [illegible]டுள்ளதாகவும் இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கல்லுண்டாய் நவாலி பகுதி வயல்களில் மேச்சல் தரைகளில் கட்டி விடும் மாடுகளை மிக நீண்ட கயிற்றில் கட்டிவிடுவதால் அவையும் நெற் பயிர்களை அழித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கால் நடைகளை வளர்ப்போர் இந்த விடயத்தில் கவனம் எடுத்துச் செயற்பட வேண்டுமென்று விவசாயிகள் கேட்டுள்ளனர். (203-100)

## பண்டத்தரிப்பு றோ.க. பரிசளிப்பு விழா இன்று

பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் சு.பிலேந்திரராசா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராகச் சண்டிலிப்பாய் கோட்ட கல்விப்பணிப்பாளர் சி.கந்தசாமி கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாகப் பண்டத்தரிப்பு பங்குந்தந்தை அருட்திரு.ம.ஜேசுரத்தினம் அடிகளார், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை ஓய்வுபெற்ற அதிபர் அ.மு.அருணாசலம் ஆகியோர் கலந்து கொள்வர். (203-135)

## வெளிச்சம் இன்றி இயங்கும் சுழிபுரம் நூல் நிலையம்

சுழிபுரம் உப அலுவலக நூல் நிலைய மின் விளக்குகள் போதிய வெளிச்சம் இன்றிக் காணப்படுவதால் வாசகர்கள் நூல்கள், பத்திரிகைகளை வாசிக்க முடியாது பெரிதும் அவதியுறுகின்றனர்.

மின்சாரம் இருந்தும் மின் வெளிச்சம் இல்லாமல் மங்கலாக உள்ளது குறித்து உரிய அதிகாரிகளுக்குத் தெரிவித்தும் திருத்தம் செய்யப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

தினமும் இங்கு நூற்றுக்கணக்கான வாசகர்கள் பத்திரிகை படித்து வருகின்றனர். மிகவும் முக்கியமாக வாசகரின் தேவையை நிறைவு செய்து கொடுப்பது அதிகாரிகள் கடமையாகும். மழை காலம் ஆரம்பித்துள்ள இவ்வேளையில் வெளிச்சம் கிடைக்க வழி செய்யுமாறு உரியவர்களிடம் மக்கள் கேட்டுள்ளனர். (203-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சு மூலமான இணக்கமான தீர்வையே விரும்புகிறோம்; அதனை ஆரம்பிப்பதற்கான புறச்சூழ்நிலை வேண்டும்

**இன்றைய கொழும்பு அரசியலில் முக்கிய பாத்திரத்தை வகிப்பவரான, நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷவைக் குறிப்பிடலாம். 40 வருடகால அரசியல் அனுபவம் கொண்ட பஸில் ராஜபக்ஷ கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தனது சகோதரரின் வெற்றிக்காக முக்கிய பங்காற்றியவர். 1977 ஆம் ஆண்டு முல்கிரிகல தேர்தல் தொகுதியில் நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் போட்டியிட்டு சிறு வித்தியாசத்தில் தோல்வி கண்ட பஸில் ராஜபக்ஷ ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிச் செயலாளர் உட்பட்ட பல பொறுப்புக்களை வகித்தவராவார். பரபரப்பான இன்றைய அரசியல் சூழ்நிலை குறித்து அவர் 'உதயன்' பத்திரிகைக்கென சில கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார்.**

(நேற்றைய தொடர்ச்சி...)

**கே:** அநுராதபுரம் விமானப்படைத்தளம் மீதான தாக்குதலால் அரசுக்கு பொருளாதார மற்றும் அரசியல் ரீதியில் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளனவா?

ப: இக்கேள்விக்கு விடை ஆம் என்றும் சொல்லலாம். இல்லை என்றும் சொல்லலாம். இவ்விடயம் குறித்து நாம் மிகவும் பொறுப்புடன் ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம். இவ்வாறான சம்பவம் ஒன்று மீண்டும் இடம்பெறாதிருக்க அரசு என்ற வகையில் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம்.

இவ்வாறான விடயங்களை நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். அரசும், மக்களும், படையினரும் இதனை எதிர்பார்த்திருந்தனர். இவ்வாறான சம்பவங்கள் உலகில் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. அதற்குத்தானே பயங்கரவாதம் என்று பொருத்தமாகப் பெயர் சூட்டியுள்ளனர்.

எவ்வாறெனினும், மோதல் என்று வந்துவிட்டால் இவற்றைத் தவிர்க்க முடியாது. பொருளாதார ரீதியில் மிகப்பெரும் பாதிப்பு என்று கூறிவிட முடியாது. ஆனாலும் ஓரளவு பாதிப்புள்ளது. நான் பெரிய பாதிப்பு இல்லை என்று கூறியதற்குக் காரணம், இவ்வாறான சம்பவம் நிகழும் என்று எதிர்பார்த்து அதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டிருந்தமைதான்.

எமது பிரதான இலக்கிலிருந்து நாம் ஒருபோதும் விலகப் போவதில்லை. முதலில் மக்களைப் பாதுகாப்பது எமது பிரதான நோக்கம். நாட்டு மக்கள் அனைவரும் எமக்கு முக்கியம். அவர்கள் மீது எமக்கு அதிக அக்கறை உண்டு. நாம் எந்த நடவடிக்கையை முன்னெடுத்தாலும் மக்களின் பாதுகாப்பையே பிரதானப்படுத்துவோம்.

**கே:** இந்த நிலைமையின் பின்னர் பல்வேறு நாடுகளிடம் போர் விமானங்களைக் கொள்வனவு செய்ய உடன்பாடு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றதே. இதன் உண்மைத் தன்மை என்ன?

ப: ஆம். போர் விமானங்கள், ஆயுதங்கள் என்பனவற்றை நாம் இதற்கு முன்னர் கொள்வனவு செய்துள்ளோம். பல்வேறு நாடுகள் இதற்கு உதவி புரிந்துள்ளன. சர்வதேச அரசியல் நிலைகளுக்கு அமைவாக - அந்தந்த நாடுகளின் வரைமுறைகளுக்கு அமைவாக - நாம் செயற்படுவதால் எமக்கு உதவிகள் இவ்விடயத்தில் கிட்டுகின்றன. உதவி அளிக்காத நாடுகள் என்று கூறும் அளவுக்கு இல்லை.

**கே:** போர் விமானங்கள், ஆயுதங்கள் வழங்கும் விடயத்தில் இந்தியாவின் பங்களிப்பு உள்ளதா?

ப: நான் முன்னர் கூறியதைப் போல உதவி செய்யாத நாடு என்று ஒன்றில்லை.

**கே:** குறிப்பாக இந்தியாவின் பங்களிப்பு எவ்வாறுள்ளது என்பதே கேள்வி.

ப: அதில் மாற்றமில்லை என்றுதான் கூற வேண்டும். இந்தியா எப்பொழுதுமே எங்கள் பக்கம் நிற்கின்றது.

**கே:** மீண்டும் பேச்சுகளை ஆரம்பிக்க வாய்ப்புகள் உண்டா?

ப: வாய்ப்புகள் இல்லை என்று கூறமாட்டேன். ஆனால் அது சமாதானப் பேச்சுகளாக அமையுமா என்று தெரியவில்லை. யுத்தத்தின்போது சமாதானப் பேச்சுகளை ஆரம்பிப்பது கடினமான காரியம். யுத்தத்தை ஆரம்பிப்பது இலகு. ஆனால் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிப்பது கடினம். சமாதானத்தை ஏற்படுத்த அரசும் ஜனாதிபதியும் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர்.

**கே:** ஜெனிவா பேச்சுகளின்போது நீங்கள் அங்கு பிரசன்னமாகி அரச பேச்சுக் குழுவினருக்குத் தேவையான ஒத்தாசைகளை வழங்கி பெரும் பங்காற்றியிருந்தீர்கள். அரசில் முக்கிய பங்கு வகிக்கும் நீங்கள் அமைதிப் பேச்சின் மீள் ஆரம்பத்துக்கான வாய்ப்புகள் குறித்துக் கருத்துக் கூறுவீர்களா?

ப: அமைதிப் பேச்சுகளை மீள ஆரம்பிக்க நான் எதனையும் செய்யத் தயாராக இருக்கிறேன். ஆனால் இந்த முயற்சிகள் என்பது நேர்மையானதாக இருக்க வேண்டும். போரைப்பற்றிப் பலர் கதைத்தாலும் பேச்சு மூலமான இணக்கப்பாட்டுத் தீர்வையே அரசுத் தலைவர்களும் ஜனாதிபதியும் விரும்புகின்றனர். அதற்குத்தான் முன்னுரிமையும் கூட. பேச்சை ஆரம்பிப்பதற்கான புறச்சூழ்நிலையும் இருக்க வேண்டும்.

**கே:** தெற்கின் தீர்வுத்திட்ட யோசனைகளின் நிலை என்ன? அது எப்போது வெளிவரும்?

ப: தொழினுட்பப் பிரச்சினைகளால் இது விடயத்தில் சற்றுத் தாமதம் ஏற்பட்டுள்ளது. மொழிபெயர்ப்பாளர்களை நாம் நாடாளுமன்றத்தின் ஹன்ஸார்ட் பிரிவிடம் இருந்து பெறவேண்டியுள்ளது. வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளதால் மொழிபெயர்ப்பாளர்களைப் பெறுவதில் தாமத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே வேலைப்பளு தீர்ந்தவுடன் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். அனைத்துக் கட்சிக் குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரணவுடன் கடந்த வாரம் பேச்சு நடத்திய நான் இதனைத் துரிதப்படுத்துமாறு கேட்டுக்கொண்டேன். இதில் ஏற்கனவே இணங்கப்பட்ட விடயங்களை - அதாவது கட்சித் தலைவர்களின் ஒருமித்த கருத்தை எட்டிய விடயங்களை - துரித கதியில் அமுல்படுத்த ஜனாதிபதி அக்கறையுடன் உள்ளார். உதாரணத்திற்கு 13 அவது அரசமைப்புத் திருத்த அமுலாக்கத்தைச் சொல்லலாம்.

**கே:** வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகள் எதுவும் இடம்பெறுகின்றனவா? சட்ட ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன என அறிகிறோம். அது உண்மையா?

ப: என்னைப் பொறுத்தவரை வடக்கில் அல்ல, கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். கிழக்கிலுள்ள ஆறு உள்ளூராட்சி சபைகளுக்குத் தேர்தல் நடத்தப்படவேண்டுமென்றாலும் அங்கு மீள் குடியேற்ற நடவடிக்கைகள் அதற்கு முன்னர் கிரமமாக இடம்பெறவேண்டும். 13 ஆம் அரசமைப்பின்படி தேர்தலுக்கு முன் குழுவொன்று நியமிக்கப்படும். இயல்பு நிலையொன்றை முதலில் ஏற்படுத்த வேண்டும்.

**கே:** அப்படியானால் கிழக்கில் இப்போதைக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட மாட்டாதா?

ப: நிச்சயமாக இயல்பு நிலை ஏற்படுத்தப்படும் வரை மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுவது அர்த்தமற்றது என்பதே எனது கருத்து. அப்படி தேர்தல் நடத்தப்பட்டால் சில சக்திகளால் எமது உண்மையான நோக்கம் பாதிக்கப்பட்டுவிடும்.

**கே:** அரச அமைச்சர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்திற்கு எடுக்கப்படாமல் ஒத்திவைக்கப்படுவது ஏன்? நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க அரசுக்கு அச்சமா?

ப: அரசுக்கு எந்த அச்சமும் இல்லை. நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தின் பிரகாரமே அரசால் செயற்படவேண்டியிருக்கிறது. அமைச்சர் மிலிந்த மொரகொட மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படுவதற்கு முன்னர் ஏற்கனவே இரண்டு பேருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே வரவு - செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்திற்குத் திகதிகள் குறிப் பிடப் பட்டுள்ளதால் நம்பிக்கையில்லாப் பிரேரணையை அவ சரமாக விவாதத்திற்கு எடுக்க முடியாது. இதற் காக அரசு அச்சப்படு வதாக அர்த்தமில்லை. அரசு இவற்றையெல்லாம் எதிர்நோக்கத் தயார். தம்மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் துரிதமாக விவாதிக்குமாறு அமைச்சர் மிலிந்த மொரகொடவே கேட்டுள்ளார் எமக்கு அச்சமில்லை.



**கே:** அரசிலிருந்து விலகித் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் நிற்கும் ஸ்ரீபதி சூரியாராச்சி மற்றும் மங்கள சமரவீர ஆகியோர் மேற்கொண்டுவரும் குற்றச்சாட்டுகள் அரசிற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றனவா?

ப: பொதுவாக அரசிற்குப் பாதிப்பு எதுவும் இல்லை என்றே கூறவேண்டும். தனிப்பட்ட ரீதியில் எனக்குக் கொஞ்சம் சங்கடமாகத்தான் இருக்கிறது. ஏனெனில், மங்கள சமரவீர என்னுடன் நெருக்கமான நட்பைக் கொண்டிருந்தவர். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் என்னுடன் ஒன்றாக செயற்பட்டவர் என்ற ரீதியில் அவரது கூற்றுகள் சங்கடத்தை ஏற்படுத்துவது உண்மைதான். ஆனால் அவர்களால் ஐக்கிய தேசியக் கட்சிக்குத்தான் பாதிப்பு அதிகம். அக்கட்சிக்காகத் தியாகம் செய்தபலர் - கட்சிக்காகத் தமது தொகுதிகளையே தியாகம் செய்த பலர் - இன்று செய்வதறியாது நிற்கின்றனர். எஸ். பி. திஸாநாயக்கவை எடுத்துக் கொள்ளுங்கள். ஐ.தே.கட்சிக்காக அமைச்சுப் பொறுப்பையும் கைவிட்டு ஒரு குழுவினரை அழைத்துக்கொண்டு சென்றார். பின்னர் ஐ.தே. கட்சிக்காக வாக்குரிமையையும், பிரஜாவுரிமையையும் இழந்தார். அவ்வாறானவர்களையும் மீறி ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து உப பிரத மராக மங்கள சமரவீர தெரிவுசெய்யப்பட்டிருப் பதால் யாருக்குப் பாதிப்பு அதிகம்? ஐ.தே.கவின் யானைச் சின்னத்தை இல்லாமற் செய்ய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் முடியாமற் போனது. ஆனால் என்றுமே கட்சிச் சின்னத்தை மாற்றாத ஐ. தே.க., மங்கள சமரவீரவின் பிரவேசத்தால் அதனை மாற்றியது. எனவே மங்கள சமரவீரவால் பாதிப்பு எமக்கா, அவர்களுக்கா?

**கே:** வரவு - செலவுத்திட்டம் முடிந்த கையோடு அமைச்சரவையில் மாற்றம் எதுவும் ஏற்படுமா?

ப:- அதனை ஜனாதிபதியிடம்தான் கேட்கவேண்டும். என் கணிப்பின்படி இப்போதைக்கு அப்படி ஒன்றும் இல்லை.

**கே:** இந்தக் கேள்வியை உங்களிடம் கேட்கலாமோ தெரியவில்லை. கருணா எங்கே இருக்கிறார்? அவர் நாட்டில் இருக்கிறாரா?

ப: (சிரிக்கிறார்) எனக்குத் தெரிந்த தகவலின்படி அவர் நாட்டில் இல்லை. எங்கே இருக்கிறார் என்று என்னால் கூறமுடியாது. *

## குருப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி...?
### (15.11.2007 முதல் 29.11.2008 வரை) - ஜோதிடர் கிருஷ்ணா.

### மேடம்

அச்சுவினி 1-4, பரணி 1-4, கார்த்திகை 1. 8 இல் இருந்த குரு பகவான் மேடராசிக்கு 9 இல் தனது வீடான தனுசுக்கு பெயர்வது இந்த ராசிகாரர்களுக்கு எல்லா நலன்களையும் தருவார். 9 இல் இருந்து ராசியைப் பார்ப்பதால் தேக நலம் கூடும். தகப்பனார் நலமும் நன்றாகும். அவர்களால் நன்மையுண்டு. அட்டமத்து குரு செய்த தீயவைகள் தீரும். கடன் தீரும். சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் தீரும். சகோதரர்களால் நன்மையுண்டு. மக்களின் படிப்பு சிறக்கும். அவர்களின் உடல்நிலை நன்றாக இருக்கும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும். தொழிலில் உயர்வு, நல்ல வீடு மாற்றம், திடீர் பணவரவு சிலருக்குக் கிடைக்கும். புண்யாகத்தினால் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். மேலதிகாரிகளின் நட்பு கைகூடும். வெளிநாட்டுப் பயணம், நல்ல வெளிநாட்டுச் செய்திகள் வரும். சிலருக்கு வெளிநாட்டுப் பணம் கிடைக்கும். நீண்ட நாள்கள் குழந்தைச் செல்வம் வேண்டி நின்றவருக்குக் குழந்தைப் பேறு கிடைக்கும், கல்யாணத் தடைகள் நீங்கி திருமணம் கைகூடும். சிலருக்குத் தொழிலுக்குக் கடன்கள் கிடைக்கும். சிலருக்கு கல்விப் பணிகள் கோயில் பணிகள் நிறைவேற அருள் கிடைக்கும். மனநிம்மதி கெட்டவர்களுக்கு மன நிம்மதி கிடைக்கும். நரம்பு சம்பந்தமான நோய் உள்ளவர்களுக்கு பிரச்சினைகள் தீரும். சிவ வழிபாடு, குல தெய்வ வழிபாடு, மஞ்சள் ஆடை தரித்தல், குரு பகவானுக்கு சுண்டல் மாலை, மல்லிகை மாலை அணிவித்தல் போன்ற பரிகாரங்கள் செய்தல் நன்மைகள் கூடி எல்லா நலங்களும் கிடைக்கும். 3,9, 18,25 ஆம் திகதிகள் நன்மை தரும்.

**பெண்களுக்கு:-** மேடராசியில் பிறந்த பெண்களுக்கு குரு பெயர்ச்சி மிகவும் யோகமான நல்ல நேரமாகும். நினைத்ததெல்லாம் நிறைவேறும். உங்களுக்கு ஒன்பதாமிடத்து குரு, அங்கிருந்து உங்கள் ஜன்ம ராசியையும் 3ஆம், 5ஆம் இடத்தை பார்வையிடும் போது மேலும் சிறப்புக் கிடைக்கும். உங்கள் உடலில் காணப்பட்டு வந்த தொந்தரவுகள் அடியோடு நீங்கும். மகிழ்ச்சியோடும், சுறுசுறுப்பாகவும் இருப்பீர்கள்.

குருபலனால் தடைப்பட்டு வந்த திருமணம், குழந்தைப் பாக்கியம் போன்ற சந்தோஷமான நிகழ்ச்சிகள் நடைபெறும். வேலை தேடும் பெண்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். ஒரு சிலருக்கு பதவி உயர்வு சம்பள உயர்வு கிடைக்கும். ஒரு சில பெண்களுக்கு வேலைக்காக வெளிநாடு செல்லும் யோகமுண்டு. சில பெண்களுக்குப் பூர்வீக சொத்துக்கள் தேடிவந்து சேரும். சிலருக்கு சொந்த வீடு வந்து சேரும். பிள்ளைகளால் ஒரு சில பெண்களுக்குப் பேரும், புகழும் கிடைக்கும். வியாழக்கிழமைகளில் தட்சிணாமூர்த்தி, விஷ்ணு பகவானுக்கும் நெய் விளக்கு ஏற்றுவது மிகவும் சிறப்பாகும். 10.05.2008 முதல் 07.09.2008 வரை சிறு பிரச்சினைகள் சிக்கல்கள் வந்தாலும் 08.09. 2007 முதல் மீண்டும் நல்ல யோகமான நேரமாகும்.

**மாணவர்களுக்கு:-** மேடராசியில் பிறந்த மாணவர்களுக்கு மிகவும் நல்ல நேரம். படிப்பு பிரமாதமாக இருக்கும். எல்லாத்திலும் (படிப்பு, விளையாட்டு) முதல் மாணவனாக விளங்குவீர்கள். சுறுசுறுப்பாகவும், புத்திசாலியாகவும் இருப்பீர்கள். சில மாணவர்களுக்கு மேல் படிப்புக்காக வெளியூர் அல்லது வெளிநாடு செல்ல வேண்டிய சந்தர்ப்பங்கள் வரலாம். ஒரு சில மாணவர்களுக்கு அரசாங்க சலுகைகள், உதவிகள் கிடைக்கும். எல்லாவற்றிலும் குருப் பெயர்ச்சி உங்களுக்கு மிகவும் சிறப்பாகும்.

**அரசாங்க வேலை செய்பவருக்கு:-** மேடராசியில் பிறந்த உத்தியோகஸ்தர்களுக்கு இந்த குரு பெயர்ச்சியால் பெருமளவுக்கு நல்ல காரியங்கள் நடக்கும். தடைப்பட்ட பதவி உயர்வு, சம்பள உயர்வு, தேவையான இடமாற்றம் உங்களைத் தேடிவரும். நீண்ட காலமாக நிறைவேறாத காரியங்கள் நிறைவேறும். இந்த குரு பெயர்ச்சி பேரும், புகழும் சகல வசதிகளையும் தேடி வந்து தருவார்கள். உங்களுக்கு இது பொன்னான நேரம் ஆகும். மேலும் உங்களுடைய மனக்கவலைகளும், மனக்குறைகளும் மறைந்து போகும். அரசியலில் உள்ள பெரிய தலைவர்களின் தொடர்பு கிடைத்து அதன் மூலம் பெயர், புகழ் சிறப்புப் பெறும்.

**சொந்தத் தொழில் செய்பவருக்கு:-** சொந்த தொழில் செய்பவருக்கு குரு பெயர்ச்சி மகிழ்ச்சியைத் தரும். இந்த 9ஆம் இடத்து குரு உங்களுக்கு பல வகையில் முன்னேற்றத்தை தருவார். செய்து வரும் சொந்த தொழில் பன்மடங்கு பெருகும். தடைப்பட்ட அனைத்து விஷயங்களும் தடைகள் நீங்கி விரைவாக நடந்து முடியும். புதிய தொழில் செய்ய விருபுகிறவர்களுக்கு சந்தர்ப்பங்கள் தானே தேடிவரும். ஏற்கனவே செய்துவரும் தொழில் செய்வோர் குருப் பெயர்ச்சியால் மேலும் சிறப்பு அடையவும், ஒருசிலருக்கு வெளிநாட்டு தொடர்பு ஏற்பட்டு [illegible] தொழில் ஆரம்பிக்கும் நிலைவரும். சிலருக்கு வெளிநாட்டுப் பிரயாணம் செல்ல வேண்டி யோகமும் வரும். *




அரச சேவையில் நிரந்தர நியமனம் பெற்று 25 வருடங்களுக்குமேல் சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்து, விருதுபெற்றுப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்ட சாவகச்சேரி நகரசபை உத்தியோகத்தர்கள் யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார், யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ ஆகியோருடன் காணப்படுகின்றனர். (218)



சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு யாழ்.சோமசுந்தரம் வீதியிலுள்ள முன்பள்ளியில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் முன்பள்ளி அதிபர் திருமதி எஸ்.இரத்தினம் மற்றும் ஆசிரியர்கள் [illegible] அமர்ந்திருப்பதையும் முன்பள்ளிச் சிறுமி ஒருவர் பாராட்டி உரை நிகழ்த்துவதையும் படத்தில் காணலாம். (படம்:லக்ஸ்மி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சியை முறியடிக்க முனையும் ஜெயலலிதா

ஈழத் தமிழர்களின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சமரச முயற்சிகளில் சர்வதேசம் எங்கும் சமாதானப் புறாவாகப் பறந்து சென்று அமைதி எத்தனங்களில் ஈடுபட்ட புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், கொடூர வான் வல்லூறுகளால் கோரமாகச் கொல்லப்பட்டுவிட்டார்.

இனத்தாலும், மொழியாலும், உணர்வாலும் ஈழத் தமிழர்களோடு - தாய், சேய் போன்று - தொப்புள் கொடி உறவு கொண்டுள்ள தமிழகம், இந்தக் கொடூரம் கண்டு கிளர்ந்து நிற்கின்றது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழ் நாட்டில் பட்டி தொட்டி எங்கும் ஈழத் தமிழர் ஆதரவு உணர்வலைகளை மீண்டும் பெரியளவில் இச்சம்பவம் தட்டி எழுப்பி விட்டிருக்கின்றது.

இந்த எழுச்சி கண்டு துவண்டுபோன ஈழத் தமிழர் விரோத சக்திகள் அந்த எழுச்சியை அடக்கவும், அதன் ஊடாகத் தமக்கு அரசியல் லாபம் தேடவும் கங்கணம் கட்டிச் செயற்பட ஆரம்பித்து விட்டன.

தமிழக எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா, ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி, கோமாளிப் பத்திரிகையாளர் சோ. ராமஸ்வாமி என்ற ஒரு சிறு கூட்டம், தமிழகத்தில் மீண்டும் கிளர்ந்துள்ள ஈழத் தமி ழர் ஆதரவு எழுச்சியை முளையிலேயே கிள்ளும் சதித் திட்டத்துடன் திரும்பவும் ஒன்று சேர்ந்து காரியமாற்றத் தொடங்கிவிட்டன. வழமைபோல வட இந்திய ஆரியப் போக்குப் பின்புல ஊடகங்கள் இதற்கு ஒத்து ஊதி, இந்த எதிர்ப்பைப் பூதாகரப்படுத்திக் காட்டவும் முழு மூச்சில் தயாராகி நிற்கின்றன.

தமிழ்ச்செல்வனின் குரூரப் படுகொலையால் உலகத் தமிழினமே அதிர்ச்சியில் உறைந்துபோய்க் கிடக்கின்றது. தமிழகத்தில் பெரும் உணர்வலைகளை அது தட்டியெழுப்பியிருக்கின்றது. இச்சமயத்தில் தாம் மௌனம் காப்பது, உலகத் தமிழினத்தின் தலைவர் என்று கூறிக் கொள்ளும் தமக்கு பேரிழுக்கையும், தமிழக மக்களின் [illegible]ம் அதிருப்தியையும் சம்பாதித்துத் தந்துவிடும் என்[illegible]தை உய்த்துணர்ந்து கொண்ட தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி முந்திக் கொண்டு மௌனம் கலைத்தார்.

தமிழ்ச்செல்வனின் கொடூரக் கொலைபற்றிய தகவல் கிடைத்ததும் தமிழகத்தில் கலைஞர் கருணாநிதியின் கூட்டரசில் பிரதான பங்கு வகிக்கும் முக்கியஸ்தரான பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் டாக்டர் இராமதாஸ், கடுமையான வாசகங்கள் அடங்கிய அவசரக் கடிதச் சீட்டு ஒன்றைக் கலைஞருக்கு அனுப்பி வைத்தார் என்றும் கூறப்படுகின்றது. இவ்விடயத்தில் விரைந்து ஏதேனும் செய்யவேண்டும் என்ற நிலைப்பாட்டுக்குத் தமிழக முதல்வரை நெட்டித் தள்ளியதில் இந்தக் கடிதத்துக்கும் பங்குண்டு என்கின்றன தமிழகச் செய்திகள்.

இந்நிலைமை காரணமாக, தமிழ்ச்செல்வன் மறைவை ஒட்டி கழிவிரக்கத்துடன் இரங்கல் செய்தி ஒன்றைத் தமக்கேயுரிய கவிதைப் பாணியில் தமிழக முதல்வர் வெளியிட்டு, இவ்விடயத்தில் உலகத் தமிழினத்தின் உணர்வலைகளோடு தாமும் சேர்ந்து நிற்கின்றார் என்பதை உலகுக்கு அடையாளப் படுத்திக் கொண்டார்.

அவ்வளவுதான். இந்த இரங்கல் செய்தியை ஒரு பெரிய விவகாரமாக்கி, ஊதிப் பெருப்பித்து, அதன்மூலம் அரசியல் குழப்பத்தை உருவாக்கத் தயாராகிவிட்டது 'ஜெயலலிதா [illegible]ட் கொம்பனி'.

ஈழத் தமிழரின் அரசியல் தலைவர் ஒருவரின் படுகொலையில் குறுகிய அரசியல் லாபம் தேடும் அற்பத் தனத்தில் அந்த அணி குதித்திருக்கின்றது.

இந்த இரங்கல் செய்தி வெளிப்பட்டதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கும் இடையில் இருந்த இரகசியத் தொடர்பு அம்பலமாகிவிட்டது என்றும் -

இந்திய அரசமைப்புக்கும் தேசியப் பாதுகாப்புக்கும் விசுவாசமாகச் செயற்படுவதற்கு உறுதியளித்து, சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்ற கலைஞரின் அரசு, இந்தியாவில் தடைசெய்யப்பட்ட புலிகள் இயக்கத்தின் பிரமுகர் ஒருவரின் மரணத்துக்கு இரங்கல் தெரிவித்ததன் மூலம், தேசிய பாதுகாப்புக்கு விரோதமாகச் செயற்பட்டதால் ஆட்சியிலிருந்து அகற்றப்படவேண்டிய தகுதி இழப்பு நிலைக்குச் சென்றுவிட்டது என்றும் -

கூக்குரலிட்டு, ஒப்பாரி வைக்கத் தொடங்கியுள்ளது ஜெயலலிதா அணி.

''உலக நாடுகள் அனைத்தும் சமாதான முயற்சிகளுக்காக அழைத்துப் பேசியது தமிழ்ச்செல்வனைத்தான். பச்சைத் தமிழரான தமிழக முதல்வர் மனித நேயத்தோடு மட்டுமல்ல, தன் இனத்து மாவீரன் ஒருவன் இப்படி அநியாயமாகக் குருத்தோலையாக வளர்ந்த நிலையில் கொல்லப்பட்டு விட்டானே என்று எண்ணிக் கண்ணீர் சிந்துவதற்கும் அவருக்கு உரிமை இல்லையா?'' - என்று ஜெயலலிதா அணியைப் பார்த்து நியாயம் கேட்டிருக்கின்றார் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி.

'தானாடாவிட்டாலும் தசையாடும்' என்பார்கள். அப்படியேதான் கலைஞர் கருணாநிதியின் மனமும், இந்தக் கொடூரக் கொலையால் கொஞ்சம் அசைந்து கொடுத்திருக்கின்றது.

அந்த உணர்வைக் கொச்சைப் படுத்துகின்றார் ஜெயலலிதா.

ஈழத் தமிழர்களுக்கும், அவர் தம் நியாயம் மிக்க போராட்டத்துக்கும் முழு ஆதரவாளர் என உலகுக்குத் தம்மை அடையாளப்படுத்தி, வெளிப்படுத்தி நிற்கும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோ போன்றோர், இத்தகைய ஈழத் தமிழர் விரோதப் போக்குடைய ஜெயலலிதாவுடன் அணி சேர்ந்து அவருக்கு வா(ள்/ல்) பிடிப்பதாகக் காட்டிக் கொள்வது என்ன நியாயம்? உலகத் தமிழர் சமூகத்துக்கு அவர் உரிய பதில் தருவது இன்றைய நிலையில் தவிர்க்க முடியாத கட்டாயமாகும்.

# ஈழத்தமிழர்கள் அழிந்துபோக பாரதம் இடம்கொடுக்கக்கூடாது

### மத்திய அரசுக்கு கம்யூனிஸ்ட் கட்சி அழுத்தம்

ஈழத்தமிழர் என்ற இனம் அழிந்து போக எவ்விதத்திலும் பாரதம் இடம் கொடுக்கக்கூடாது என்று மத்தியை ஆளும் காங்கிரஸ் கூட்டணிக் கட்சிகளில் ஒன்றான கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழகப் பிரிவு வலியுறுத்தியுள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழகப் பிரிவின் உத்தியோகபூர்வ நாளிதழான 'ஜனசக்தி'யில் வரையப்பட்டுள்ள ஆசிரியர் தலையங்கத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

'விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனின் மறைவு பல்வேறு கேள்விகளை எழுப்பிக்கொண்டிருக்கின்றது. இன்னமும் பேச்சு மூலம் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க இலங்கை அரசு தயாராக இருக்கிறதா என்பது அவற்றில் முதன்மையான கேள்வி.

தமிழ்ச்செல்வனைக் கொன்றதன் மூலம் இலங்கை அரசு எதனைச் சாதிக்க விரும்புகிறது? தமிழர் - சிங்களவர் என்று இரண்டாகப் பிரிந்துகிடக்கும் இலங்கையில் இதன் மூலம் இன ஒற்றுமையை மீண்டும் அரசால் உருவாக்க முடியுமா? இவ்வாறான தாக்குதல்கள், அழிப்பின் மூலம் இலங்கையில் ஒற்றுமையை உருவாக்க முடியாது என்பது கடந்தகாலம் கற்றுத்தந்துள்ள பாடம். இருந்தாலும் இலங்கை அரசு இதனைச் செய்திருப்பதற்கு ஏதோ ஒரு உள்நோக்கம் இருக்க வேண்டும்.

புன்னகை மாறாத முகப்பொலிவைப் பெற்ற தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டிருப்பது அனைவருக்கும் பெரும் வேதனையை அளித்திருக்கிறது. தமிழகத்தில் மக்கள் அனைவரும் இறப்பின் துயரத்தை தமிழ் மக்களோடு பகிர்ந்துகொண்டிருக்கிறார்கள். விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் நடந்த பேச்சில் பங்குபற்ற அமைதிக்கான உலகத் தலைவர்கள் அனைவரும் அமைதி முயற்சிகளுக்கு இது ஒரு பின்னடைவு என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், இலங்கையில் எழுந்துள்ள ஆதிக்க வெறியர்களின் குரல் இதிலிருந்து மாறுபட்டுள்ளது.

*பேச்சு அர்த்தம் இழந்து போய் விடும்*

புத்தபிக்குகள் இப்படிப்பட்ட கொலைகளின் மூலம்தான் இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்கமுடியும் என்று ஊடகங்களில் வெறிகொண்டு கருத்து வெளியிட்டு வருகிறார்கள். அரசோடு நெருங்கிய தொடர்பில் உள்ள அனைவரும் இதே கருத்தைத்தான் தெரிவிக்கிறார்கள். இதுதான் அரசின் நிலை என்றால், 'பேச்சு' என்ற சொல் அர்த்தமிழந்து போய்விடும். நோர்வே, ஜெனிவா, ஜப்பான் என்று தொடர்ந்த அமைதிப்பேச்சின் பலன் முற்றாகப் பயனற்றதாகிவிடும்.

*இந்திய அரசு என்ன செய்யப்போகிறது?*

சிங்கள மக்களுக்கு வெறியேற்றி அவர்களிடமுள்ள வாக்குகளைப் பெறுதல், வெறிபிடித்த ஆதிக்க அரசியலாக வெகுகாலமாக இலங்கையில் தொடர்ந்து வருகிறது. வேறு எதையும் விட அவர்களுக்கு இவ்வாறான நடவடிக்கைகள் மிகவும் சுலபமானதாக இருக்கின்றன. ஆனால் நாடு, மக்கள், நாட்டின் பொருளாதாரம் ஆகியவற்றின் கதி என்னவாகும்? ஆனால், ஆதிக்க வெறியும் சுயநலப் போதையும் வந்துவிட்டால் அது யாருடைய இழப்பைப் பற்றியும் கவலை கொள்வதில்லை. இந்தப் பின்னணியில் இந்திய அரசு என்ன செய்யப்போகிறது என்பது இதில் முக்கியமான கேள்வி? இலங்கை, இந்தியாவின் அண்டை நாடு, நடைபெறும் போராட்டம் தமிழ் மக்களின் போராட்டம். இதில் இந்திய அரசு வெறும் பார்வையாளராக மட்டும் இருந்துவிடமுடியாது.

*தமிழ் மக்கள் அழியும் வாய்ப்பு*

இந்திய அரசின் இராணுவ உதவியைப் பெற்று போரின் மூலம் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என இலங்கை அரசு கணக்குப் போடுகிறது. அவ்வாறு நடக்குமானால் அதில் தமிழ்மக்கள் அழிந்துபோகும் வாய்ப்புகள்தான் அதிகம் இருக்கும். இதற்கு எந்த விதத்திலும் இந்திய அரசு இடம் கொடுத்துவிடக் கூடாது. பேச்சுமூலம் பிரச்சினை தீர்க்கப்பட தன்னாலான எல்லா முயற்சிகளையும் இந்தியா செய்வதுதான் இன்றைய தேவை - என்று தலையங்கத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

## குடாநாட்டில் இயல்புநிலை நேற்றுப் பாதிப்புற்றிருந்தது

யாழ்ப்பாணம் .நவ.6

விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப. தமிழ்ச் செல்வனின் இறுதி நிகழ்வையொட்டி நேற்று யாழ். குடாநாட்டில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருந்தது. நகரிலும், கிராமப்பகுதிகளிலும் மக்கள் நடமாட்டம் வழமையைவிடக் குறைவாகவே காணப்பட்டது.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. மாணவர்கள் மற்றும் பல்கலைக் கழக சமூகத்தினரும் எனப்பலர் இந்த சோக நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நேற்றுக் காலை முதல் யாழ். நகரப் பகுதி உட்பட அனைத்து இடங்களிலும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டிருந்தது. படையினர் வீதிச் சோதனை நடவடிக்கைகளிலும் ரோந்து பணியிலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

யாழ். நகர நுழைவாயிலின் சகல வீதிகளிலும் கடும் சோதனையின் பின்னரே நகருக்குள் அனுமதிக்கப்பட்டனர்.

மானிப்பாய் - யாழ். பிரதான வீதி, பருத்தித்துறை வீதி, அல்லைப்பிட்டி யாழ். வீதி, பலாலி வீதி, கொட்டடி வீதி என்பனவற்றின் ஊடாக பயணஞ் செய்தோர் மிகத் தீவிர சோதனையின் பின்னரே நகருக்குள் அனுமதிக்கப் பட்டனர்.

யாழ். நகரப்பகுதியில் படையினரின் நடமாட்டம் அதிகமாகக் காணப்பட்டமையால் பொதுமக்களின் நடமாட்டம் மிகக் குறைவாகவே இருந்தது. கடைகளில் தீபாவளி விற்பனை நடவடிக்கைகள் இடம்பெற்ற போதும் பொதுமக்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது.

(அ-50-111-95)

## யாழ். மாணவன் கோவையில் மாயம்!

கோயம்புத்தூர்,நவ.6

கோவையில் கல்விகற்றுவந்த யாழ். மாணவன் ஒருவன் காணாமற்போயுள்ளார் எனப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

சூலூரிலுள்ள தனியார் கல்லூரியொன்றில் கல்விகற்றுவந்த மாணவன் திடீரென மாயமாகியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம், திருநெல்வேலியைச் சேர்ந்தவர் சிவசங்கர். இவரது மகன் புண்ணியமூர்த்தி (வயது 17). கோவை சூலூரிலுள்ள தனியார் கலை அறிவியல் கல்லூரியில் பி.கொம் முதலாம் வருடத்தில் கற்றுவந்தார். விடுதியில் தங்கியிருந்தார். கடந்த செப்டெம்பர் 22ஆம் திகதியன்று வார்டனிடம் வெளியே சென்று வருகிறார் எனக் கூறிச்சென்ற புண்ணியமூர்த்தி, பின்னர் விடுதிக்குத் திரும்பவில்லை.

இது குறித்துக் கல்லூரி முதல்வர் முகமது முபாரக், சூலூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். காணாமற்போன மாணவர் புண்ணியமூர்த்தியைப் பொலிஸார் பல்வேறு இடங்களில் தேடிவருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(சி)

### நாளை

| | |
|---|---|
| ஐப்பசி - 21 | புதன்கிழமை 07.11.2007 |
| திதி : திரயோதசி | முன்னிரவு: 12.36 |
| நட்சத்திரம் : | அத்தம் பிற்பகல் : 05.50 |
| சுபநேரம் | : 04.35 - 06.05 |
| ராகுகாலம் | : 12.05 - 01.35 |

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு .நவ.6

வலிகாமம் கல்விவலயப் பாடசாலைகளுக்கு இடையே இடம்பெறும் உதைபந்தாட்ட சுற்றும் போட்டியின் 16,18 வயது பிரிவினர்களுக்கான 3ஆம் இடத்திற்கான போட்டிகள் இன்று பி.ப 2.00 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இன்றைய போட்டிகளில் விவரங்கள், வருமாறு.

*16 வயதுப் பிரிவு*

✱ தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

*18 வயதுப் பிரிவு*

✱ வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் எதிர் [illegible]லை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்.

(1-86)

## ஒருவர் கடத்தப்பட்டார்; இருவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம்.நவ.6

இனந் தெரியாத ஆயுததாரிகளால் ஒருவர் கடத்தப்பட்டதாகவும் இருவர் காணாமற் போயுள்ளதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்புத்துறையைச் சேர்ந்த தனபாலசிங்கம் ஜெனேஸ்க்குமார் (வயது -26) என்ற இளைஞர் கடந்த 27ஆம் திகதி இரவு அவரது வீட்டிற்கு வந்த இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டதாக அவரது உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை:-

ஏழாலையைச் சேர்ந்த மகாலிங்கம் மதி சீலன் (வயது-30) என்ற வர்த்தகரை கடந்த 4ஆம் திகதி முதலும், கொக்குவிலைச் சேர்ந்த இராசதுரை திலிப்குமார் (வயது-30) என்ற சிவில் தொழிலாளியை கடந்த 3ஆம் திகதி தொடக்கமும் காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்ற அவர்கள் மீண்டும் வீடு திரும்பவில்லை என முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-50)

## வேலணைப் பிரதேசசபை கட்டடத் திறப்புவிழா நாளை

யாழ்ப்பாணம்.நவ.6

வேலணை பிரதேசசபை தலைமைப் பணிமனை புதியகட்டடத் திறப்புவிழா நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் க.கணேஷ் கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.


பிரதேச சபை செயலாளர் கை.மகேந்திரலிங்கம் தலைமையில் இக் கட்டட திறப்பு விழா இடம் பெறும்.

பேராசிரியர் கலாநிதி பொ. பாலசுந்தரம் பிள்ளை, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார், வடக்கு மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் (தலைமைப் பீடம்) க.இராசையா, பிரதேசசெயலர் (வேலணை) மு.நந்த கோபாலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்வர். (203-95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய சுத்தியோடு கூடிய பேச்சுவார்த்தையே சமாதானத்துக்கு வழிவகுக்கும் என நம்பியவர்

## இரங்கல் செய்தியில் மன்னார் ஆயர்



கிளிநொச்சி, நவ. 6

உண்மையானதும் இதயசுத்தியோடும் கூடிய அரசியல் பேச்சுவார்த்தையே சமாதானத்துக்கு வழிவகுக்கும் என்பது தமிழ்ச்செல்வனிடம் வேரூன்றி இருந்தன.

பிரிகேடியர்சு.ப.தமிழ்ச்செல்வனின்மறைவு குறித்த தமது இரங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவித்தார் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை.

அவர் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்ததாவது:

வன்னியில் வாழ்ந்து வரும் ஒரு கத்தோலிக்க ஆயர் என்ற வகையில் தமிழ்ச்செல்வனுடன் நாட்டின் சமாதானம் பற்றியும் வன்னி மக்களின் தேவைகள் பற்றியும் கடந்த 15 ஆண்டுகளாக நான் நெருக்கமாக தொடர்பு கொண்டிருந்தேன்.

உண்மையானதும் இதய சுத்தியோடும் கூடியதுமான அரசியல் பேச்சுவார்த்தையே சமாதானத்துக்கு வழிவகுக்கும் என்பது அவரிலே வேரூன்றியிருந்தன. மக்கள் மீது அவர் கொண்டிருந்த அக்கறையும் அன்பையும் நான் பலமுறை கண்டு வியப்படைந்திருக்கின்றேன்.

சமாதானம் பற்றிய எனது கருத்துக்களை வரவேற்றதோடு மக்கள் சார்பாக நான் விடுத்த வேண்டுகோள்களையும் அவர் மகிழ்ச்சியோடு ஏற்று ஆவன செய்தார். இதனால் நாடு நன்மை அடைந்தது. மக்களும் ஆறுதல் அடைந்தனர் - என்றார். (அ)

## விசேட அடையாள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளும் விமானப் பயணம் மற்றும் கப்பல் பயணங்களுக்கும், பாதுகாப்புப் படையினரால் வழங்கப்படவுள்ள குறிப் பிட்ட விசேட அடையாள அட்டைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

ஆகையால் இதுவரையில் தமது விசேட அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கத் தவறியுள்ளோர் இவ் விடயத்துக்கு முக்கியத்துவம் அளித்துத் தமது விண்ணப்பங்களை இம் மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட நிலையங்களில் கையளிக்குமாறு யாழ். நகர 512 ஆவது இராணுவப் படைப்பிரிவு அதிகாரி பொது மக்களைக் கேட்டுள்ளார். (அ)

## ஓமந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் ஈடுபட்டதால் நேற்று நண்பக லுக்குப்பின்னர் அப்பகுதியில் இருந்து தொடர்ந்து குண்டு வெடிப்பு அதிர்வுகள் கேட்ட வண்ணம் இருந்தன என்று தகவல்கள் தெரிவித்தன.

## தாக்குதல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகின்றன. அதேபோல கிளிநொச்சி வான் தாக்குலும் நடத்தப்பட்டது'' - என்று அங்கு அவர் குறிப்பிட்டார்.

''அப்படியானால் அங்கு தமிழ்ச்செல்வன் இருக்கிறார் என அறிந்து அவரை இலக்கு வைத்து அத்தாக்குதல் நடத்தப்பட்டதா?'' - எனச் செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

''புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனை கொல்லும் நோக்கம் எமக்கு இருக்கவில்லை. விமானப்படையினர் கிளிநொச்சியிலிருந்த புலிகளின் முகாம் ஒன்றையே தாக்கினர். அதில் பலர் கொல்லப்பட்டனர். புலிகள் கூறுவது போல் ஐவர் மட்டுமல்ல. ஆனால், தமிழ்ச்செல்வன் இதில் சிக்கியமை தற்செயலான சம்பவமே. - அவர் கொல்லப்பட்டார் என்பது எமக்கு பின்னரே தெரியவந்தது'' - என்று பதிலளித்தார் இராணுவப் பேச்சாளர். (சி)

## முக்கியஸ்தர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீரவணக்க நிகழ்வில் கலந்துகொள்வதற்காக பெருமளவிலான பிரமுகர்கள், மத குருமார்கள், வெளிநாடுகளின் ஊடகவியலாளர்கள் வவுனியாவில் திரண்டிருந்தனர். அவர்களை கிளிநொச்சிக்கு அனுமதிக்க படையினர் மறுத்துவிட்டனர். கடும் கெடுபிடிகளின் பின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆயர்கள் இருவர், மதகுருமார் சிலரைத் தவிர ஏனையோர் அனுமதிக்கப்படவில்லை.

இதேவேளை நேற்று நண்பகல் ஓமந்தைப் பகுதி மீது படையினர் எறிகணைத் தாக்குதலை நடத்தி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரை வெளியேறச் செய்து விட்டுப் போக்குவரத்தையும் மூடிவிட்டனர் என்றும் கூறப்படுகின்றது. (சி)

## நிபந்தனையற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கமளித்தார் அமைச்சர்.

*'சமாதானப்புறா' தீவிரவாதத்தைக் கைவிடவில்லை*

''தமிழ்ச்செல்வன் குறித்துக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் 'சமாதானப்புறா' எனப் பலராலும் வர்ணிக்கப்படும் தமிழ்ச்செல்வன் சமாதானத்தை விரும்புபவர்போல் பேச்சுகளில் கலந்து கொண்டாரே. தவிர, அவர் தீவிரவாதத்தைக் கைவிடவில்லை. புலிகள் பேச்சுகளில் கலந்துகொண்ட அதேசமயம் மறுபுறத்தில் இராணுவத்துக்கு எதிரான தாக்குதல்களைத் தீவிரமாக முன்னெடுத்தார்.

''தமிழ்ச்செல்வன் பல்வேறு பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டவர், அவற்றை நிரூபிக்க ஆதாரங்கள் உண்டு, அதற்கு மாறாக, சமாதான நடவடிக்கைகளில் முக்கிய பங்காற்றினார் என தமிழ்ச்செல்வனைச் சித்திரிப்பது தவறானது.'' - என்றார் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.

''தமிழ்ச்செல்வன் இலக்கு வைக்கப்பட்டமையைப் பார்க்கும்போது ஒவ்வொரு விடுதலைப் புலி உறுப்பினர்களும் இவ் வாறு இலக்கு வைத்து அழிக்கப்படுவர் என்று அர்த்தம் கொள்ளலாமா?'' - எனச் செய்தியாளர் ஒருவர் கேட்டார்.

''பாதுகாப்புக்கு சவாலாக இருக்கும் ஒவ்வொரு பயங்கரவாதியும் அழிக்கப்படுவார்.'' - என்று அமைச்சர் பதிலளித்தார். (சி)

## வவுனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் மூடப்பட்டிருந்தன. நகரப் பகுதிப் பாடசாலைகள் இயங்கவில்லை. மக்களின் நடமாட்டம் அரிதாகவே காணப்பட்டது. பொலிஸாரும் படையினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். (சி)

## அரசி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

போலியான கடவுச்சீட்டை வைத்திருந்தார் என்ற காரணத்தால் கடந்த வெள்ளிக் கிழமை அவர் கைது செய்யப்பட்டிருந்தார். தடுத்து வைக்கப்பட்டு அவர் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருகின்றார். (அ-1)

## கிபிர் அச்சுறுத்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலை சூட்டினர்.

பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் வீரச்சாவைத் தழுவிய லெப். கேணல் அன்புமணியின் திருவுருவப்படத்துக்கு அவரின் துணைவியார் யாழ்மதி மாலை சூட்டினார்.

மேஜர் மிகுதனின் திருவுருவப் படத்துக்கு விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன், மேஜர் கலையரசனின் திருவுருவப்படத்துக்கு விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, லெப். ஆட்சிவேலின் திருவுருவப்படத்துக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், லெப். மாவைக்குமரனின் திருவுருவப்படத்துக்கு தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் ஆகியோர் மாலைகளை சூட்டினர்.

இதனைத் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கில் மக்கள் அணிதிரண்டு மலர்தூவி கண்ணீர் மல்க வணக்கம் செலுத்தினர்.

விடுதலைப் புலிகளின் கட்டளைத் தளபதிகள், தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் ஆகியோர் மாலைகளைச் சூட்டி வணக்கம் செலுத்தினர்.

மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை, அங்கிலிக்கன் திருச்சபை பேராயர் மற்றும் கிறிஸ்தவ அமைப்புகளின் உயர்நிலையினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அகவணக்கம் செலுத்தினர்.

வணக்க உரைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், எஸ். ஜெயானந்தமூர்த்தி, பா. அரியநேத்திரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இறுதி வணக்கம் தெரிவித்த மக்கள் கண்ணீர் மல்க உணர்வெழுச்சியுடன் பிரியாவிடை கொடுத்தனர்.

வீரவணக்கக் கூட்டம் நிறைவடைய கிளிநொச்சி நகரில் இருந்து கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம் நோக்கி வித்துடல் அணியிசை வகுப்புடன் நகர்ந்தபோது நகரிலிருந்து துயிலுமில்லம் வரையிலான 6 கிலோமீற்றர் தூரத்திற்கு வீதியின் இருபுறமும் மக்கள் அணிதிரண்டு வணக்கம் செலுத்தினர்.

இவ்வீதியில் வீடுகளின் வாசல்கள் தோறும் பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வனின் திருவுருவப்படத்தை வைத்து மக்கள் தமது வணக்கத்தைத் தெரிவித்திருந்தனர்.

கிளிநொச்சி நகரிலிருந்து மக்களின் வணக்கத்துடன் கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் மாலை 6 மணிக்கு வித்துடல் சென்றது. அங்கு இறுதி வணக்கத்துடன் விடுதலைப் புலிகளின் முழுப்படை மதிப்புடன் பிரிகேடியர் சு.ப. தமிழ்செல்வனின் வித்துடல் உலகத் தமிழினத்தின் பிரியாவிடையுடன் தீருவிதைகுழியில் விதைக்கப்பட்டது. (அ-)


IIS

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2008

சுவர்ச்சிகரமான கட்டணச்சலுகையை பெற்றுக்கொள்ள IIS இல் புலமைப்பரிசிலினைத் தெரிவுசெய்யுங்கள்

கணனிக்கல்விக் கல்வியில் நவீனத்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள்

விண்ணப்ப படிவங்களை IIS அலுவலகங்களிலும், பூபாலசிங்கம், Srilanka, Ruban, நாவலர் ஆகிய புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

INSTITUTE OF INFORMATICS STUDIES
100, Clock Tower Road, Jaffna.



ஓம் விநாயகர் விசுவப் பிரம்மனே நமக

# திருமண அழைப்பு

அன்புடையீர்

நிகழும் மங்களகரமான சர்வசித்து வருஷம் ஐப்பசி மாதம் 21ஆம் நாள் (07.11.2007) புதன்கிழமை முற்பகல் 9.02 மணிமுதல் 10.58 மணி வரையிலான சுபமுகூர்த்த வேளையில்,

| எமது புத்திரன் | எமது புத்திரி |
|---|---|
| திருநிறைசெல்வன் | திருநிறைசெல்வி |
| யோகேஸ்வரன் | சிவதுளசி அம்பாள் |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இறைவன் திருவருள் துணைகொண்டு செல்வச் சந்நிதி கோயிலில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

கல்வளை வீதி,
வைரவர் கோயிலடி,
சண்டிலிப்பாய்.

திரு.திருமதி சுப்பிரமணியம்,
மகாலட்சுமி குடும்பத்தினர்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)



# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 | 29 |
| 04 | 10 |
| 1927 | 2005 |

அமரர் நன்னித்தம்பி தம்பு

நாமெல்லாம் கற்றுயர அரும்பாடு பட்டீர்
எப்போதும் எங்களது சிந்தனையே கொண்டீர்
அன்போடு வளர்த்தெடுத்துப் பண்புகளும் சொன்னீர்
அப்பா உம் நினைவுகளே எம் இதயம் எங்கும்
எப்போதும் உமை மறவோம் எதுவரினும் தாறோம்
எம்மோடு இருக்கின்றீர் என உணருகிறோம்.

வன்னிய சிங்கம் வீதி,
தாவடி வடக்கு, கொக்குவில். குடும்பத்தினர்.



# மரண அறிவித்தல்

## கணபதி கந்தர்



கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி கந்தர் நேற்று (05.11.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் சிவமணி, சின்னம்மா, சரஸ்வதி, சிவபாலசிங்கம் (டென்மார்க்), காலஞ்சென்ற தவபாலசிங்கம் ஆகியோரின் தந்தையும் செல்வராசா, கிருஷ்ணன், பாலசுப்பிரமணியம், நற்குணதேவி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும் சின்னப்பிள்ளை, வெள்ளையம்மா ஆகியோரின் சகோதரனும் கேதீஸ்வரி (கனடா), காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி, கிருபாகரன் (ஜேர்மனி), சுபதீஸ்வரி (கனடா), வரதீஸ்வரி, தவானினி, குகநந்தினி, லலிதினி, காலஞ் சென்ற பிரபானந், ரதீஸ்வரன், ரம்யா, அகல்யா, லினோஜன், யதுர்சன், விதுர்ஷன், தாசிகா ஆகியோரின் அன்புப் பேரனும் சாருகா, துஜீபன், ஜெஸ்விகா, தரணியா, சுமேகா, சுபவீன், அபிநயா, தமிழினபன், நவின்ஸ், சேயோன் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (06.11.2007) செவ்வாய்க்கிழமை 10 மணியளவில் கைதடி ஊத்தல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகுலம்,
கைதடி வடக்கு.

தகவல்
மா. செல்வராசா (மருமகன்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.11.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.